விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO ... LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 17 வியாழக்கிழமை (30.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

# விசாரணை அறிக்கையில் ஆச்சரியம் காத்திருப்பு

## மனித உரிமை ஆணையாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நடத்திய விசாரணை அறிக்கை ஆச்சரியங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என ஐநா மனித உரிமை ஆணையாளர் சயிட் ராட் அல் ஹுசேன் தெரிவித்துள்ளார். இந்த தகவலை நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ். தூதுவர் மீள அழைப்பு

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு அவுஸ்திரேலியர்களுக்கு இந்தோனேசியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அந்நாட்டுக்கான தனது தூதுவரை அவுஸ்திரேலியா திரும்பப் பெற்றுள்ளது.

இந்த இரு அவுஸ்திரேலியர்களுக்கான மரண தண்டனையை நிறுத்துவற்கு அவுஸ்திரேலியப் பிரதமர் டோனி அபோட் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தோனேசியாவில் நேற்று செவ்வாய்க் 23ஆம் பக்கம் பார்க்க....

## 19ஆவது திருத்தச் சட்டம் மகிந்தவுக்கு அரசியல் அடி

### அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதை தடுக்க பல சதித்திட்டங்களை மேற்கொண்ட போதிலும் அவை தோற்கடிக்கப்பட்டு, திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், விவாதத்திற்கு எடுக்கப்படவிருந்த கடந்த 21ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் அதனை குழப்பியதுடன் நாடாளுமன்ற அவையை தமது நித்திரை செய்யும் அறையாக மாற்றியதுடன் பாரிய சதித்திட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவின் சகல சதித்திட்டங்களும் தோற்கடிக்கபட்டு, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

மகிந்தவையும் கோத்தபாயவையும் இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைத்த 24ஆம் பக்கம் பார்க்க....

## 19 இன் நன்மைகள்

(கொழும்பு)

19 ஆம் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டமையினால் கிடைக்கும் நன்மைகள் குறித்து ஜனாதிபதி ஊடக பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அனைத்து இலங்கையருக்கும் அரச நிறுவனங்களில் குடியுரிமையை நடைமுறைப்படுத்தல் மற்றும் பாதுகாத்தலினூடாக தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளும் 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களின் மிகுதி நிலங்களை உடனடியாக கையளியுங்கள்

### யாழ்.ஆயர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கையளிக்கப்படாதுள்ள தமிழர்களின் எஞ்சிய நிலங்களையும் கையளிக்குமாறு யாழ்.ஆயர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வருடத்திற்கான முதலாவது ஆயர் பேரவை கடந்த வாரம் கண்டியில் நடைபெற்ற பின்னர் இலங்கை ஆயர்கள் ஜனாதிபதியை கொழும்பில் இவரது வாசஸ்தலத்தில் சந்தித்தனர்.

இச் சந்திப்பின் போது 19-வது அரசியல் சீர்திருத்தச் சட்டமூலம் அமுலாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிய ஆயர் பேரவையில் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சந்தித்து உரையாடினார். அதன்போது யாழ்.ஆயர் மேற கூறியவாறு ஜானதிபதியிடம் பணிவான வேண்டுதலை முன்வைத்தார்.

ஆயர் தொடர்ந்து ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறுகையில், வடககு கிழக்கு மக்களின் அதிகப்படியான வாக்குகளினால் நீங் கள் ஜனாதிபதியாக தெரிவு 23ஆம் பக்கம் பார்க்க....

## 19ஆவது திருத்தம் நிறைவேற்றம் ஜனாதிபதியை புகழ்ந்த நிமல்

(கொழும்பு)

எந்த ஜனாதிபதிகளும் மாற்றம் செய்யாத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களில், 19ஆவது திருத்தச் சட்டம் மூலமாக மாற்றம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக சிறப்பான நபர் என்பதை செயலில் ஒப்புவித்துள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை 24ஆம் பக்கம் பார்க்க....

## பாராளுமன்றை கலைக்க திட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 ஆம் திருத்தச் சட்டத்தை மலினப்படுத்த முயற்சிக்கின்றார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்ய வேண்டுமென்றே ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முயற்சித்து வருவதா 24ஆம் பக்கம் பார்க்க....

## ஒரேகல்லில் இரண்டு குருவிகளை கொலை செய்த 19ஆவது திருத்தம்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரே கல்லில் இரண்டு குருவிகளை 19-வது அரசியலமைப்பு திருத்தம் மூலம் கொலை செய்ய முடிந்தது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

19-வது திருத்தச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தோல்வியை தழுவியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அதிகார வர்க்கமுறை தற்போது 19ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 19ஆவது திருத்தச் சட்ட சமர்ப்பிப்பால் பாராளுமன்றில் தமிழ் புறக்கணிப்பு

## பிரபா கணேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

19ஆவது திருத்த சட்ட வாக்களிப்பின் பின்னர் திருத்தங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதன் பிரதிகள் யாவும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் காணப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சபையில் சுட்டிக்காட்டிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரக்குறைவான வார்த்தைகளை எனக்கு எதிராக பிரயோகித்ததன் மூலம் தமிழ் மக்களின் மொழி உரிமைகளுக்கு எதிராக அவர் செயற்படுகின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்த சட்டத்தின் மூலமாக நாட்டின் ஜனநாயகம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் தனது அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கு முழு சம்மதத்தையும் தெரிவித்திருந்தார்.

இருந்த போதிலும் பாராளுமன்றத்திற்கு வழங்கவிருந்த அதிகாரங்களை கபடமான முறையில் பிரதமருக்கு கிடைக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு சாதகமாக பயன்படுத்த முற்பட்டபோது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களாகிய நாங்கள் அதனை நிராகரித்து பல திருத்தங்கள் அதில் உள்வாங்கப்பட்டு அதன் பின்பு ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கு நாங்கள் அனைவரும் அணிதிரண்டு வாக்களித்து நிறைவேற்றிய போதிலும் நாங்கள் உள்வாங்கிய திருத்தங்களின் பிரதியை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்காமல் இன்றைய அரசாங்கம் அதனை நிறைவேற்ற முயற்சித்தது.

இது சபை நடவடிக்கைகளுக்கு முரணானது என்பதனால் திருத்தங்கள் அடங்கிய பிரதியை அனைத்து மொழிகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என சபாநாயகர் பாராளுமன்றத்தை சில நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.



மீண்டும் பாராளுமன்ற அமர்வின் போது திருத்தங்களின் பிரதிகள் வெறுமனே சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் மட்டுமே இருந்தன.

நான் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகன தொண்டமான் ஆகியோர் எமது ஆட்சேபனைகளை தெரிவித்திருந்தோம்.

நான் எழுந்து எமது சிறப்புரிமையைப் பற்றி பேசிய பொழுது பிரதமர் என்மீது நாகரிகமற்ற வார்த்தைகளை பிரயோகித்தார்.

அதேபோல் பகலில் தமிழராகவும் இரவில் சிங்களவராகவும் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன் ஆங்கிலம் புரியாவிட்டால் மொழிபெயர்ப்பு கருவியை காதில் மாட்டிக் கொள்ளுமாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு நண்பன் என்ற மாயையை எப்பொழுதும் ஏற்படுததி வருகின்றார்.

இவர் கருணாவை பிரித்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை இல்லாதொழித்தது போன்று முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லாவையும் பிரித்தெடுத்து சிறுபான்மை மக்களின் போராட்டங்களை சிதைத்துள்ளார்.

இவரது உண்மையான முகத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் ஒரு முறையாவது தமிழ் மொழி புறக்கணிக்கப்படுமாயின் அது தொடர்ச்சியாக இடம்பெற்று விடும்.

இதனை அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# உயர் தேசிய பட்டதாரிகள் சனியன்று கவனயீர்ப்பு!

## நீதிமன்ற சிபார்சை வழங்கக் கோரி

(யாழ்ப்பாணம்)

உயர் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட சிபாரிசுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. அதனை உடனடியாக வழங்குமாறு கோரி உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் இக் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக பட்டதாரிகள் சங்கம் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

2012-ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகளை அபிவிருத்தி அலுவலர்களாக அரச சேவைக்குள் உள்ளீர்க்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை பல்கலைக்கழகம்/ நிறுவனங்களில் இருந்து பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்ற அடிப்படையில் நாமும் விண்ணப்பித்து நேர்முகத்தேர்விற்கும் தோற்றியிருந்தோம்.

அதனடிப்படையில் உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகள் உட்பட அனைவருக்கும் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்ட போதும் வட மாகாணத்தைச் சேர்ந்த உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளிற்கு (2010-ம் ஆண்டிற்கு முன்னர் பட்டம் பெற்றவர்கள்) அரசியல் பின்புலத்தின் அடிப்படையில் மிகவும் அநீதியான முறையில் நியமனம் மறுக்கப்பட்டிருந்தது.

அதே தருணத்தில் வட மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாண உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி அநீதிக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை பாதிக்கப்பட்ட 228 பட்டதாரிகள் இணைந்து 30.06.2012 தாக்கல் செய்திருந்தோம். தொடர்ந்து மன்றில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று எமக்கு இழைக்கப்பட்ட அநீதி உணரப்பட்ட நிலையில் 35 வயதைக் கடந்த ஒரு தொகுதி பட்டதாரிகளைத் தவிர்த்து ஏனைய மனுதாரர்களிற்குப் 01.10.2014-ம் திகதியிலிருந்து பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

35 வயதைக் கடந்த ஏனைய பட்டதாரிகளிற்கு நியமனம் வழங்கப்பட்ட போதும் எமது மனுதாரர்களிற்கு இதுவரை பயிலுநர் நியமனம் வழங்கப்படவில்லை.

30.10.2014 அன்று வழக்கின் முடிவில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை அரச தரப்பு சட்டத்தரணியும் ஏற்றுக் கொண்ட நிலையில் சமரசமான முறையில் இரு தரப்பு வழக்கறிஞர்களும் வழக்கை முடிவுக்கு கொண்டுவர மன்றில் இணங்கினர். அதனடிப்படையில் பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் நீதியரசர் சிசர ஜே டி அப்ரூ மற்றும் நீதியரசர் ஜெயவர்தன ஆகியோரடங்கிய அமர்வு சில சிபார்சுகளை வழங்கி வழக்கை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையில் சுமார் 07 மாத காலம் கடந்தும் இன்றுவரை பாதிக்கப்பட்டவர்களாகிய எமக்கு நீதிமன்ற சிபார்சினூடான வரப் பிரசாதம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பட்டதாரிகளான நாம் உயர்நீதிமன்ற சிபார்சை நடைமுறைப்படுத்துமாறு கோரி 02.05.2015 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலய முன்றலில் அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம் என்றுள்ளது. (எ-11)


## கடமை நிறைவேற்று அதிபர் சங்கம் விசேட பொதுக் கூட்டம்

வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 02.05.2015ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களின் நியமன கடிதத்தைப் பரிசீலித்தல் மற்றும் உரிய தரப்பினர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக தரவுகளைச் சேகரித்து இறுதிப் பட்டியல் தயாரித்தல் என்பன இடம்பெறவிருப்பதால் இக் கூட்டத்தில் வட மாகாணத்தில் உள்ள அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொ.பே:-0776701512, 0771697986

ரி.ஜெபதாஸ்
தலைவர்

எப்.ரி.எடிசன்
செயலாளர்

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 222 5392
(ஏ8284)

## தேவை

துறைமுகம், விமான நிலையத்திற்கு 18-55 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விரைவாக தேவை. தங்குமிடம்/ உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவ்வேலையில் பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும். உயர்ந்த சம்பளத்துடன் உடை இலவசமாகக் கொடுக்கப்படும். (231)

0759219226

## தேவை

துறைமுகம்/ விமான நிலையங்களில் உல்லாச பிரயாணத் துறையில் போக்குவரத்து சேவைக்காக கனரக/ மென்ரக சாரதிகள்/சாரதி உதவியாளர்கள் தேவை

45000/= (230)

0759219227

## பழுது பார்த்தல்

அனைத்து விதமான தையல் மெசின்களும் வீடுகளுக்கும் கடைகளுக்கும் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

சூரியன்:-0770258694

## பெயர் மாற்றம்

ஏழாலை தெற்கு மயிலங்காடு சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட அருமைராசா சிவசெல்வவதி ஆகிய நான் இன்று முதல் அருமைராசா செல்வவதி என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனையும் இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
அருமைராசா செல்வவதி
(233)

## மேதினக் கூட்டம்

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கமும் அதன் இணை நிறுவனங்களும ஒன்றிணைந்து நடத்தும் மேதினக்கூட்டம் நாளை காலை 9.30மணிக்கு சங்கத் தலைவர் எஸ்.லோக நாதன் தலைமையில் கல்முனையில் நடைபெறவுள்ளது. (இ-3-29)


வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

(C-478)

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776


# நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள்

## யாழ். மாவட்டத்திலும் சேகரிக்கப்படுகிறது

நேபாள நாட்டில் இடம் பெற்ற பாரிய இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கையில் இருந்து நிவாரணப் பொருட்கள் வழங்கும் நோக்கில் யாழ்.மாவட்டச் செயலகத்தினால் நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேபாளநாட்டிற்கு இலங்கையில் இருந்து நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்காக நாட்டில் உள்ள அனைத்துமாவட்டச்செயலகங்கள் ஊடாக பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் உதவிப்பொருட்கள் வழங்க விரும்புகிறவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான கூடாரம், மெத்தைகள், போர்வைகள், நீர் தூய்மையாக்கும் கருவி, சுகாதாரப்பொருட்கள் மற்றும் வெளியே தங்குவதற்கு பொருத்தமான உடைமைகள் என்பவற்றை யாழ்.மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ அலகில் வழங்குமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-9)

# வெசாக்தினத்தை முன்னிட்டு அரச அதிபரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 3ஆம் திகதி மற்றும் 4ஆம் திகதி ஆகிய தினங்களில் அனைத்து மதுபானசாலைகள், இறைச்சிக்கடைகள், விலங்குகள் கொல் களங்கள், பந்தயம் மற்றும் சூதாட்ட நிலையங்கள், களியாட்ட நிலையங்கள் ஆகியவற்றை மூடுமாறு அரசாங்கத்தினால் அறி விக்கப்பட்டுள்ளதாக அரசாங்க உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்:1943.02.27 மறைவு:2015.04.27



## அமரர் சுப்பிரமணியம் செந்தில்நாதன்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபர், தர்மகர்த்தா, அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

1974 முதல் 2003 வரை தொழில்நுட்பவியல் கல்லூரி கொக்குவிலில் விரிவுரையாளராகவும் உப அதிபராகவும் தொடர்ந்து அதிபராகவும் கடமையாற்றி இளம் மாணவர்களின் வாழ்வியற் கல்விச் செயற்பாடுகள் உயர்வுபெற அரும்பாடுபட்டு உழைத்தவர்.

தமது பரம்பரை ஆலயங்களான அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் என்பவற்றில் 1975 முதல் தமது தந்தையாரோடு இணைந்து நிர்வாகச் செயற்பாடுகளை நடத்தி 1985 இல் தந்தையாரின் மறைவைத் தொடர்ந்து இரண்டு ஆலயங்களதும் தர்மகர்த்தாவாக இருந்து நல்ல முறையில் பரிபாலனம் செய்து வந்தார்.

1997 இல் அகாயக்குளம் விநாயகர் சந்நிதானத்தில் பாலஸ்தாபனம் செய்வித்து அடியார்களின் பேருதவியோடு 1999 மஹா கும்பாபிஷேகம் செய்வித்து தொடர்ந்தும் அடியார்களின் ஒத்துழைப்போடு 2005 இல் பஞ்சமுக விநாயகப் பெருமானின் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும்

2006 இல் முழுமையான சித்திரத்தேர் அமைப்பும் 2013 இல் நூதன வசந்தமண்டபத்தின் கும்பாபிஷேகமும் 2014 இல் சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய தேர்முட்டியை அமைப்பித்தும் 2015 இல் சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய யாகசாலையை அமைப்பித்தும் இறை தொண்டாற்றிய பெருந்தகை.

1947 இல் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடையாதிருந்த அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய கருங்கல் திருப்பணி வேலைகளை அடியார்களின் உதவியோடு நிறைவேற்றி 1993 இல் மஹா கும்பாபிஷேகம் செய்வித்து தொடர்ந்து 2011 இல் அம்பிகையின் நாவலடி சந்நிதானத்தில் திரிதள இராஜகோபுரத்தை அமைப்பித்தும் கருங்கல் திருப்பணிகள் செய்வித்தும் இறைதொண்டாற்றி சந்நிதான நித்தியபூசைகள் ஒழுங்காக நடைபெற பற்றுச்சீட்டு நடைமுறையையும் தொடக்கிவைத்த பெருமைக்குரியவர்.

இறை பணியைப்போல் மக்களுக்கும் பல சேவைகள் செய்து அனைவருடைய மனதிலும் நீங்காத இடம்பிடித்த பெரியாருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானையும் முத்துமாரி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!!

(9396)

சிவாச்சாரியாரும், திருப்பணிச்சபையினரும், அன்னதான சபையினரும் , அடியார்களும் அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம்.

சிவாச்சாரியாரும் பரிபாலன சபையினரும் அன்னதான சபையினரும் சங்காபிஷேக குழுவினரும் அடியார்களும் ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

# இராசி பலன்

30.04.2015

(சித்திரை 17, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

துவாதசி பின்னிரவு 5.09 மணிவரை

உத்தரம் பின்னிரவு 4.41 மணிவரை

இராகுகாலம் 1.28-2.58 மணிவரை

சுபநேரம் 7.28-8.58 மணிவரை

வளவன்

**மேடம்:** மற்றவர்களின் மனநிலை அறிந்து கொண்டு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**மிதுனம்:** நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண முயற்சிப்பீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும்நாள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே யென நினைக்கவேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** திடீர்ப் பயணங்கள் இடம் பெறலாம், கைவிட்டுப் போனதாக நினைத்த பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள்.

**கும்பம்:** நல்லவன் என நினைத்த ஒருவன் உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், பிரயாண பயமுண்டு, வேலைச்சுமை கூடும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணவேண்டிய நாள்.

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 189

## பொறாமையிலிருந்து விடுதலை

...நீங்கள் உங்களுக்குள் மையம் கொள்ளாததால் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருப்பீர்கள். உங்கள் மையம் மாறிக் கொண்டே இருக்கிறது. உங்கள் மையம் மற்றவர்களிடம் இருக்கிறது. உங்களுக்குள் அல்ல! அவர்களுடைய மையமும் வேறெங்கோ இருக்கிறது. அவர்களுக்குள் அல்ல! ஒட்டு மொத்தமாக ஊசலாடிக் கொண்டிக்கும் மையத்தில் இல்லாத எண்ணங்கள், மற்ற உணர்ச்சிகளுக்கேற்றவாறு நீங்கள் எவ்வளவு ஓட வேண்டும். எவ்வளவு இழுபறி செய்ய வேண்டும் என்று கற்பனை செய்து பாருங்கள்! நீங்கள் ஒரு பொம்மையாகிவிடுகிறீர்கள்.

நான் சொல்கிறேன்... ஒவ்வொரு முறை நீங்கள் எதையேனும் விரும்பும் போதும் தனியே அமர்ந்து உண்மையிலேயே அது உங்களுக்கு வேண்டுமா அல்லது மற்றவர்களிடம் இருப்பதால் அதை விரும்புகிறீர்களா என்று எண்ணிப்பாருங்கள். ஒவ்வொரு ஆசை எழும்போதும் அதை நேர்மையாக ஆராய்ந்து பாருங்கள். உங்களுடைய எல்லா கௌரவப் பிரச்சினைகளையும் விட்டு விட்டு ஒரு சுய- ஆராய்ச்சியை மேற்கொள்ளுங்கள். நீங்கள் தனியாக இருக்கும் பொழுதே உங்கள் கௌரவத்தை விட முடியவில்லையென்றால் மக்களுடன் இருக்கும் பொழுது எவ்வாறு விடப்போகிறீர்கள்?

நீங்கள் உங்களுடைய ஆசைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்வதாயிருந்தால் நடைபாதையில் இறப்பதாயிருந்தாலும் அமைதியுடனும் முழுத் திருப்தியுடனும் இறக்க முடியும். கடன் வாங்கப்பட்ட ஆசைகளுடன் முழு வாழ்க்கை வாழ்ந்தாலும் நீங்கள் பளிங்கு மாளிகையில வாழ்ந்தாலும் உங்களால் ஒரு போதும் உண்மையான மன நிறைவைக் காண முடியாது. மேலும் நிறைவேற்றப்படாத கடன் வாங்கப்பட்ட ஆசைகளில் இருந்து விடுதலை பெற முடியாமல் நீடிக்கப்பட்ட இழுபறியான இறப்பையே பெறுவீர்கள்.



ஜைன மதத்தில் நீங்கள் பிறக்கும் பொழுதே உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான முழு உணவும் சக்தியும் உங்களுடைனேயே அனுப்பப்பட்டு விடுவதாக ஒரு நம்பிக்கை இருக்கிறது.

இதன் பொருள் பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்களை இந்த பூமிக்கு அனுப்பு முன்னரே உங்களுடைய உண்மையான தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான சக்தியையும் கொடுத்தே அனுப்புகிறது என்பதுதான்.

ஆனால் இந்த சக்தியை உங்களுடைய கடன் வாங்கப்பட்ட ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுது தான் நீங்கள் உங்களுக்கு ஒன்றுமே கொடுக்கப்படவில்லை.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

---

# அதிசய உலகம்

### உடலில் தோன்றிய மின்சாரம்: அமானுஷ்ய சக்தியுடன் வாழ்ந்த வினோதப் பெண்!

இங்கிலாந்தின் மான்செஸ்டரில் வசித்து வந்த ஜாக்குலின் என்ற பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் ஒரு நாள் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த சண்டையை அடுத்து கோபத்தில், வீட்டைவிட்டு வெளியேறி ஸ்கூட்டரில் சென்ற ஜாக்குலினின் கணவர் ரான் விபத்தில் சிக்கி கழுத்து மற்றும் தண்டுவடம் பகுதியில் பலத்த காயமடைந்துள்ளார். இதையடுத்து ஒரு மாத காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கணவரை இழந்த சோகத்தில் இருந்த ஜாக்குலினின் வீட்டில், எலக்ட்ரிக் பல்புகள் தானாக வெடிக்க தொடங்கின. மேலும், அவர் வீட்டில் இருந்த வேக்கம் க்ளீனர் தானாகவே செயற்பட தொடங்கியுள்ளது. இது மட்டுமல்லாமல் வீட்டில் இருந்த அனைத்து மின் சாதனங்களும் தானாகவே இயங்க தொடங்கியதால் ஜாக்குலின் செய்வதறியாது திகைத்துள்ளார்.

பின்னர் இவற்றை சரி செய்ய நபர் ஒருவரை வரவழைத்தார். ஆனால் அந்த நபராலும் இதற்கான சரியான காரணங்களை கண்டறிய முடியாததால், இறந்து போன தனது கணவர் தான் வீட்டில் ஆவியாக உலவுவதாக ஜாக்குலின் நம்ப தொடங்கியுள்ளார்.



தொலைக்காட்சி முதல் ரேடியோக்கள் வரை இவர் எதனையுமே தொடாமல் தானாக இயங்க தொடங்கியதால் அச்சத்தில் உறைந்த அவர், எலக்ட்ரிசியன் ஒருவரை 2. ஆவதாக மணமுடித்தார். ஆனாலும் எந்த மாற்றமும் நிகழவில்லை. இவ்வாறு சென்று கொண்டிருந்த ஜாக்குலின் வாழ்வில், பேராசிரியர் ஒருவர் மூலமும் அவரது 2 ஆவது கணவர் மூலமும் இந்த பிரச்சனை முடிவுக்கு வந்துள்ளது.

அதாவது அந்த பேராசிரியரும், 2வது கணவரும், ஜாக்குலின் உடலில் சாதாரண மனிதருக்கு இருக்க வேண்டிய நிலை மின்சாரத்தின் அளவு 10 மடங்கு அதிக அளவில் இருப்பதால் தான், மற்ற மின் சாதனங்கள் இவரது இருப்பினால் இயங்க தொடங்கியுள்ளது என்ற முடிவுக்கு வந்தனர். இதையடுத்து, அவரது உணவு பழக்கத்தை மாற்றியதோடு, உடலில் உள்ள உபரி மின்சாரத்தினை வெளியேற்ற அவரது கைகளில் வெங்காயத்தினை வைத்து கொண்டு வீடுகளில் நடைபயிற்சி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த வழிமுறைகளால் காலப்போக்கில் அவரது பிரச்சனைகள் படிப்படியாக குறைந்துள்ளன. ஆனால் 1985 இல் ஜாக்குலினுக்கு பிறந்த 4 ஆவது பெண் குழந்தை, பிறந்த சில காலத்திலேயே அதே பிரச்சனையை எதிர் கொள்ள தொடங்கியுள்ளது. ஜாக்குலினுக்கு ஏற்பட்ட இந்த வினோத பிரச்சனைகள் ஏன் அவரது முதல் கணவர் இறந்ததும் தொடங்கியது? ஹை வோல்டேஜ் சின்ட்ரோம் எனப்படும் உயர் மின்னழுத்த நோய்க்குறியால் ஜாக்குலின் பாதிக்கப்பட்டாரா? இதுபோன்ற எண்ணற்ற கேள்விகளுக்கான விடைகள் மர்மமாகவே உள்ளது!

---

# சமைப்போம் சுவைப்போம்

## காலிஃப்ளவர் 65



**தே.பொருட்கள்:**

காலிஃப்ளவர் - 1 சிறியது (நறுக்கியது)

தயிர் - 100 மி.லி

இஞ்சி பூண்டு- 2 டீஸ்பூன்

சோள மாவு - 2 டேபிள் ஸ்பூன்

எலுமிச்சை சாறு - 1/2 டீஸ்பூன்

கரம் மசாலா - 1 டேபிள் ஸ்பூன்

மிளகாய் தூள் - 1 டீஸ்பூன்

மிளகுத் தூள் - 1/2 டீஸ்பூன்

உப்பு - தேவையான அளவு, கேசரி பவுடர் - 1 சிட்டிகை, எண்ணெய் - பொரிப்பதற்கு தேவையான அளவு

**செய்முறை**

முதலில் கொதிக்கும் நீரில் காலிஃப்ளவரை போட்டு, சிறிது நேரம் வேக வைத்து இறக்கி, நீரை வடித்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தில் தயிர், இஞ்சி பூண்டு பேஸ்ட், உப்பு, கரம் மசாலா, மிளகாய் தூள், மிளகுத் தூள், கேசரி பவுடர் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக இந்தக் கலவை அதிக நீராகவோ, கெட்டியாகவோ இருக்கக்கூடாது. பின் அதில் காலிஃப்ளவரை போட்டு நன்கு பிரட்டி, 10 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், காலிஃப்ளவரை போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்தால், காலிஃப்ளவர் 65 ரெடி!

# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் நேற்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தை சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் தங்களுக்கான நியமனங்களை வழங்குமாறு கோரி யாழ்.மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலை மறித்து நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





2012 ஆம் ஆண்டு முதல் பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்படு வதாக கூறி வருடக்கணக்கில் ஏமாற்றி வருவதாகவும் நியமனங்களை விரைந்து வழங்குமாறும் கூறியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பட்டதாரிகள் நுழைவாயிலை மறித்துபோராட்டத்தில் ஈடுபட்டமையால் பொதுமக்கள் தங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள மாவட்டச் செயலகத்துக்குள் செல்ல முடியாத நிலை காணப்பட்டது.தங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என எழுத்து மூலமான உறுதிமொழியை உரிய தரப்பினர் தரும்வரையில் தங்கள் ஆர்ப்பாட்டம் தொடரும் என பட்டதாரிகள் கூறினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்த மாவட்டச் செயலாளர் நாகலிங்கன் வேதநாயகன் நான் ஒரு அரச அதிகாரி. முடிவுகளை என்னால்கூறமுடியாது. மத்திய அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இது தொடர்பில் நான் தெரியப்படுத்த முடியும். மத்திய அரசு முடிவுகளை நான் செயற்படுத்த முடியும் என தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்துக்குச் சென்றுவரும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாவட்டச் செயலக வாயில் ஓரமாக நின்று பட்டதாரிகள் தங்கள் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டனர். (இ-4)

# ரணிலிடம் விசாரணை நடத்தவேண்டும்

## ரஜீவ விஜேசிங்க கோரிக்கை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு இலஞ்சம் வழங்கியமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக விசாரணை மேற்கொள்வதென்றால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் அவ்வாறான குற்றச்சாட்டிற்கு எதிராக விசாரணை மேற்கொள்ள முடியும் என அவர் அக்கடிதத்தில் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு,தேர்தலில் ஆதரவு வழங்குவதற்காக, அமைச்சர் ரவூப் ஹக்கீம் பணம் கேட்டதாக பிரதமர் ரணில் தன்னிடம் கூறியதாக, அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அமைச்சர் றிசாத் பதியூதினிற்கு அமைச்சர் பதவி வழங்கியமைக்கான காரணம் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்கின்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனவும் இதை பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் தெரிவித்ததாகவும் அக்கடிதத்தில் ரஜீவ விஜேசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

# உழவன் சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீடு

(சாவகச்சேரி)

பயிர்த்தொழிலையே தமது வாழ்வதாரமாகக் கொண்டிருக்கும் விவசாயிகள் தமது முயற்சிகளை செவ்வனே முன்னெடுக்கவென ஒரு சிறந்த வழிகாட்டியாக வெளிவரும் உழவன் மாதாந்த சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீடு மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சஞ்சிகையின் ஆசிரியர் லெம்பேர்ட்டின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த வெளியீட்டு நிகழ்வுக்கு பயிர்த் தொழிலை முழு நேரமாக கொண்டிருக்கும் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். (இ-3-29)

# ஒருகோடி மதிப்புள்ள மருந்துகளை நேபாளத்திற்கு இந்தியா அனுப்பும்

(டில்லி)

நிலநடுக்கத்தில் பேரழிவுக்குள் ளாகி உள்ள நேபாளத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு உதவும் வகையில் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள மருந்துகளை அனுப்ப மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் நேற்று முன்தினம் கூறும்போது, "நேபாளத்தில் 7 இலட்சத்தும் மேற்பட்ட நீரிழிவு நோயாளிகள் உள்ளனர். அவர்களுக்காக ஒரு கோடி ரூபா மதிப்பு ள்ள 75 ஆயிரம் இன்சுலின் மருந்து போத்தல்கள் அனுப்பப்படும். இது 4 தொன் எடை கொண்டது. இன் னும் கூடுதலாக தேவைப்பட்டாலும் அந்த மருந்துகளையும், உயிர் காக்கும் பிற மருந்துகளையும் அனுப்ப தயாராக உள்ளோம் என்றார்.

நிலநடுக்கத்தால் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கிக் கொண்ட 70 மலையேற்ற வீரர்களை காப்பாற்றியுள்ளார் இந்திய இராணுவ டாக்டர் ரிதேஷ் கோயல். சியாச்சின் பனிமலை பகுதியில் பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர் எவரெஸ்ட் சிகரத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய இராணுவ மலையேற்ற வீரர்கள் குழுவில் உள்ளார். நில நடுக்கத்தால் நேபாளத்தில் சிக்கித் தவித்த அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஜேர்மனி உள்ளிட்ட 15 நாடுகளைச் சேர்ந்த 170 பேரை இந்தியா மீட்டுள்ளது குறிப்பிடத்தக் கது. (இ)

# மதியரசனுக்கு அஞ்சலி; உதவிக்கும் முன்வருகை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபையின் நேற்றைய மாதாந்த கூட்டத்தில் அண்மையில் உயிரிழந்த உடுப்பிட்டி பிரதேசசபை உறுப்பினர் ஆ.மதியரசனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் அவரது உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை குறித்த உறுப்பினரின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அவரது பிள்ளைகளின் கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை விருத்தி செய்வதற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் உதவுவதற்கு முன்வந்துள்ளனர்.

இதன்படி தவிசாளர் முன்வைத்தஉதவித் திட்ட முன்மொழிவை பிரதேசசபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.(இ-3-60)

மகாதேவாய நம
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்
கிளிநொச்சி
Regd.no.svp 104/44
ஆண்டுப் பொதுக்கூட்டம்
இடம்: ஆச்சிரம மண்டபம்
காலம்: 04.05.2015 திங்கள், பி.ப.3 மணி
நிகழ்ச்சி நிரல்
தேவாரம்
தலைமையுரை
செயலாளர் அறிக்கை
நிதி அறிக்கை
விசேட தீர்மானங்கள்
நிர்வாக சபைத் தெரிவு
நன்றியுரை
அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.
சிவன் சேவடி போற்றி
இறைபணியில்
ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
குருபீடாதிபதி
(229)
குறிப்பு:இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 6
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC, M.COM,CPA/ தனியார் தொழில் அவுஸ்ரேலியா PR
தொ.இ: B/2254

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 36 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் கனடா PR
தொ.இ: B/704

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 17 1/2 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Dip in computer/ தனியார் தொழில
தொ.இ: B/709

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 11
உயரம்: 6'
தகைமை/தொழில்: LLB/ சட்டத்தரணி
தொ.இ: B/713

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 56 செவ் 7 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1164

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 11 3/4 சூரிசெவ் 9இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.COM,HND/ அரச தொழில்
தொ.இ: G/1165

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 52 செவ் 12 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ QS
தொ.இ: G/1166

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 24
உயரம்: 5'
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: G/1167

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# 4 மாதங்களில் 115 வர்த்தகர்களுக்கு 6,76,500 ரூபா தண்டப்பணம் விதிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் 115 வர்த்தகர்களிடமிருந்து 6 இலட்சத்து 76 ஆயிரத்து 500 ரூபாய் தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது யாழ்.மாவட்டத்தில் இந்தவருடம் ஜனவரி மாதத்தில் இருந்து ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி வரை யாழ்.பாவனையாளர் அதிகார சபையினால் வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிறைகுறைந்த மண் விற்பனை காலாவதியான பொருட்கள் விற்றமை, அத்தியாவசிய பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்தமை. விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை போன்ற குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி குற்றங்களை வர்த்தகர்கள் ஒப்புக் கொண்டதை அடுத்து குறித்த தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள 46 வர்த்தக நிலையங்களில் பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதற்கு எதிராக மே மாதம் அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# 825 குடும்பங்கள் மீளக்குடியேற பதிவு

## யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியேற இதுவரை 825 குடும் பங்கள் தமது பதிவினை மேற்கொண்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேறுவதற்காக வலிகாமம் வடக்கு வலிகாமம் கிழக்கு பகுதிகளில் மீளக்குடியேற மக்கள் தமது பதிவினை மேற்கொண்டு வருவதோடு காணிகளை துப்புரவு செய்யும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

அலுவலர்களுக்கு முதற்கட்டமாக 13 ஆயிரம் ரூபாய் துப்புரவு பணிக்காக வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் முதற்கட்டமாக பதிவினை மேற்கொண்ட 70 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அடுத்த வாரம் அளவில் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் மாவட்டச் செயலகத்தால் கனரக வாகனங்கள் மூலம் வீதிகள் துப்புரவு செய்யும் பணி இடம்பெற்று வருகின்றது. கிணறுகள் துப்புரவு செய்யும் பணிக்கு ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் உதவியுடன் துப்புரவு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

காணிகளின் எல்லைகளை சட்டவிரோதமான முறையில் வெட்டுபவர்கள் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்படவுள்ளன. அவ்வாறு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதை கண் டால் சம்பவம் நடக்கும் இடங்களை உடனடியாக அறியத்தர வேண்டும் எனவும் அவ்வாறு அறியத்தந்தால் உடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



யாழ்.செய்திகள்

# புங்குடுதீவு - ஊரதீவு சனசமூக நிலைய திறப்பு விழாவும் விளையாட்டு விழாவும்

புங்குடுதீவு-ஊரதீவு சனசமூக நிலைய திறப்பு விழாவும் மாபெரும் விளையாட்டு விழாவும் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் சனசமூக நிலைய மைதானத்தில் தலைவர் ந.சாந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் புவியியற் துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், சிறப்பு விருந்தினர்களாக வடக்குமாகாண சபை உறுப்பினர் க.விந்தன் , வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா, கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவிக் காணி ஆணையாளர் பொன்.வைரமுத்து, வேலணைப் பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா.புஸ்பராணி,புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலயத் தலைவர் அ.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக புங்குடுதீவு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத் தலைவர் அ.சண்முகநாதன், புங்குடுதீவு வடகிழக்கு ஜே/22 கிராம அலுவலர் க.சிந்துஜா, புங்குடுதீவு கிழக்கு ஜே/23 கிராம அலுவலர் பா.வாகீசன், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம், புங்குடுதீவு சோ.துரைச்சாமி வித்தியாலய அதிபர் ம.கணேசன், நா.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஊரை நிதியம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# வசந்தோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் திருப்பதி பத்மவதித் தாயார், கோதை நாச்சியார் உடனுறை ஸ்ரீவெங்கடேஸ்வர பெருமான் ஆலய வசந்தோற்சவ விழா விஞ்ஞாபனம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி சித்திரை 20 ஆம் நாள் பூரண தினத்தன்று நிறைவுறும். (இ

# மேதினக் கூட்டம் புத்தூரில்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தொழிலாளர் தினமான மேமாதம் முதலாம் திகதி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினக் கூட்டம் மாலை 6 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மக்கள் அதிகாரத்திற்கான மாற்று அரசியலை முன்னெடுக்க அணி திரள்வோம் எனும் தொனிப்பொருளுடன் கட்சியின் இவ்வருட மேதினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் மேதின ஊர்வலம் புத்தூர் சந்தி சுன்னாகம் வீதியூடாக புத்தூர் கலைமதி விளையாட்டு மைதானத்தை வந்தடையவுள்ளது.

கட்சியின் வடபிராந்திய செயலாளர் தோழர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் உட்பட கட்சியின் பிரமுகர்கள் பலர் உரையாற்றவுள்ளனர். (இ-3)

# கலாபூஷண விருது-2015

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்காக சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை ஆகிய கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றிய அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த மேற்குறிப்பிட்ட துறைகளில் சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கலாம் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஸ்ரீமோகன் அறிவித்துள்ளார். (இ

மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் பிரித்தானிய நிர்வாகத்தினரின் நிதியுதவியுடன் மயிலிட்டி கண்ணகி முகாமில் வசிக்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்ட போது...

(படம்:-கரவை ணை வாய்செய்தியாளர்)



# கடையில் திருட்டு

(அளவெட்டி)

தெல்லிப்பழை கொல்லங்கலட்டி மடத்தடி சந்தியில் அமைந்துள்ள நூதன் ஸ்ரோசில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடையிலிருந்த பால்மா வைகள், சவர்க்காரம், பிஸ்கட்டுகள் என்பனவே திருட்டுப் போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-3)

# யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட 26 வீதிகள் விரைவில் புனரமைப்பு

## நான்கு கட்டங்களாக முன்னெடுக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் நிலையான வைப்புப் பணத்தில் இருந்து மாநகர சபைக்கு உட்பட்ட அவசரமாகவும் அவசியமாகவும் உள்ள 26 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பல வீதிகள் பாவனைக்கு உதவாத வகையில் காணப்படுகின்றன. அவ்வாறு இனங்காணப்பட்ட வீதிகளை நான்கு பிரிவுகளாக பிரித்து புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

அந்தவகையில் முதலாம் கட்டமாக கனகரட்ணம் வீதி, கனகரட்ணம் 2 கிளை வீதிகள், மலர் மகள் வீதி, நடுத்தெரு வீதி, திருமகள் வீதி, கலைமகள் வீதி ஆகிய ஆறு வீதிகளும்.

இரண்டாம் கட்டமாக இலுப்பைக் குளம் வீதி, பேரின்பநாயகம் வீதி, நொதாரிஸ் வீதி, ப்ரூட்டி வீதி, ஸ்ரான்லி கல்லூரி அருகாமை வீதி, கச்சேரி கிழக்கு வில் வந்தெரு வீதி, மொரிஸ் வீதி ஆகிய ஏழு வீதிகளும்.

மூன்றாம் கட்டமாக சிவன் வடக்கு வீதி, ஓட்டுமடம் வீதி, ஓட்டுமடம் சின்னப்பு வீதி, ஓட்டுமடம் செபியன் வீதி, வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் வீதி, மணல் தறை வீதி, குமரசாமி வீதி ஆகிய ஏழு வீதிகளும்

நான்காம் கட்டமாக சுந்தப்பசகரம் வீதி, முனீஸ்வரன் வீதி, ராமலிங்கம் செட்டியார் வீதி, யமுனா வீதி, செல்லர் வீதி, மருதடி வீதி ஆகிய ஆறு வீதிகளும் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தமும் மறுநாள் பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-3)

# எம்.பிக்களின் சிறப்புரிமை மீறப்பட்டதாக குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்படுவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போது தெரிவித்துள்ளார்.


அண்மையில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு முன்பாக மக்கள் ஒன்றுகூடிய போது, தாம் அங்கு சென்றமைக்காக தம்மை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமை சிறப்புரிமை மீறலாகுமென தெரிவித்தார்.

அத்துடன், மக்கள் ஒன்றுகூடும் இடத்திற்கு செல்லும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில், இவ்விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் தான் ஆராய்வதாக தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு உத்தரவிட்டபோது, ஆணைக் குழுவிற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவையும் மீறி குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட குற்றத்திற்காக, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 26 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்து

# வரலாற்றில் இடம்பிடித்த ஜனாதிபதி மைத்திரிபால

சுமந்திரன் புகழாரம்

**(கொழும்பு) நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்ய இணங்கிய முதல் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன வரலாற்றில் இடம்பிடித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றில் 19ஆம் திருத்தச் சட்டம் குறித்த விவாதத்தில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

18ஆம் திருத்தச் சட்டத்தின் முதல் பேச்சாளராக உரையாற்றிய நான், ஜனநாயகத்தின் முடிவு இதுவெனக் குறிப்பிட்டேன்.

இன்று 18ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய விவாதம் நடத்தப்படுகின்றது அதில் பங்கேற்கக் கிட்டியமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

ஜனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்ட பலரும் நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்வதாக கூறியிருந்தனர்.

எனினும் எவரும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்ய இணக்கம் தெரிவித்து அதனை நடைமுறைப்படுத்தியவர் என்ற ரீதியில் வரலாற்றில் இடம்பிடித்துவிட்டார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

# புதிய கட்சி அமைப்பதற்கு பொதுபலசேனா தீர்மானம்

புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்கு பொதுபலசேனா அமைப்பு தீர்மானித்துள்ளதாக அவ் அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தூய்மையான சிங்கள, பௌத்த கட்சி ஒன்றையே அமைக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய கட்சியின் தலைவர் யார் என்பதையும் கட்சியின் பெயர் என்ன என்பதையும் இன்னும் தீர்மானிக்கவில்லை என அவர் தெரவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுபல சேனா அமைப்பின் புதிய கட்சி போட்டியிடுவதற்கு அநேக வாய்ப்புகள் உள்ளதாகவும் ஞான சார தேரர் தெரிவித்தார்.

இவ் அரசியல் கட்சிக்கு எந்த ஒரு அரசியல்வாதியையோ வேறு கட்சிகளையோ இணைத்துக்கொள்ள போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அம்பாந்தோட்டை முதல்வர் எராஜ் பெனாண்டோ கைது

அம்பாந்தோட்டைமுதல்வர் எராஜ்பெனாண்டோகைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்ஊடகப்பேச்சாளர்ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரை தாக்க முயற்சி செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எராஜ் பெனாண்டோ அம்பாந்தோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் ஆட்சியின் போது, அம்பாந்தோட்டை சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினரை நோக்கி துப்பாக்கியுடன் ஓடிவந்து எராஜ் பெனாண்டோ அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

எனினும் அது விளையாட்டுத் துப்பாக்கி என முதல்வர் எராஜ் பெனாண்டோ தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கிளர்ச்சி தொடர்பில் சோமவன்ச விளக்கம்



மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிய அதன் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தாம் கட்சியினுள் முன்னெடுத்த கிளர்ச்சி தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். கட்சியினுள் தற்போதுள்ள பிரச்சினை தொடர்பாக புரிந்து செயற்படுமாறு அவர் ஜே.வி.பி. உறுப்பினர்களிடமும், பொதுமககளிடமும் தனது அறிக்கை மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவுக்கு தம்மால் முன்வைக்கப்பட்ட சில யோசனைகளையும் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தனது ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்திற்கு எதிரான சூழ்ச்சி தொடர்பிலான கலந்துரையாடல் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு கொண்டிருந்த நிலைப்பாடு தவறானது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற நாள் இரவு முன்னெடுக்கப்பட்ட சூழ்ச்சி வெற்றி பெற்றிருந்தால் அதன் பாதிப்பை மக்கள் விடுதலை முன்னணியே முற்றுமுழுதாக சந்தித்திருக்கும் எனவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். அதுமாத்திரமல்லாது எந்த நோக்கத்திற்காக ஜனாதிபதி தேர்தல் நாள் இரவு இச் சூழ்ச்சி நடைபெற்றது என்பது தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீர முறைப்பாடு ஒன்றை முன்வைத்தமை அவர் மக்கள் விடுதலை முன்னணிக்கு காட்டிய ஒத்துழைப்பு என சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். (இ)

# முடிந்தால் தேர்தலில் போட்டியிட்டு மகிந்த வென்று காட்டட்டும்-ரில்வின்

அரசியல் ஆசை இருந்தாலும் மக்களின் ஆதரவு இன்றி மகிந்த ராஜபக்ஷவினால் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது. முடிந்தால் அடுத்த தேர்தலில் மகிந்த போட்டியிட்டு வென்று காட்டட்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி சவால் விடுத்துள்ளது.

கடந்த ஆட்சியின் ஊழல் மோசடிகளை மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்றும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

தான் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி பெறுவேன் என்று முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் பத்து வருட ஆட்சிக் காலத்தில் தேசிய ஒற்றுமையில் பாரிய விரிசல் நிலைமை உருவாகியது. மதக் கலவரங்களும் அடக்குமுறை செயற்பாடுகளுமே மேலோங்கிக்காணப்பட்டன.



சிறுபான்மை மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டனர்.

நிறைவேற்று ஜனாதிபதியின் சர்வாதிகார போக்கின் காரணமாக மக்கள் வெறுக்கும் நபராகவே இன்று மகிந்த ராஜபக்ஷ மாறியுள்ளார்.

கடந்த ஆட்சியில் செய்த தவறுகள், பொருளாதார மற்றும் வாழ்வாதார நெருக்கடிகள், அடக்குமுறைகள் என அனைத்தும் மக்கள் மத்தியில் ஆழமாக பதிந்துள்ளன.

மகிந்தவின் அரச குடும்பம் செய்த மோசடிகள் அனைத்தும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இவ்வாறானதொரு நிலைமையில் மக்கள் மீண்டும் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப அரசியலுக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். எனினும் மகிந்தவின் தோளில் பயணித்த ஒரு சிலர் இன்றும் அவரை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர்.

மக்களின் ஆதரவு இல்லாத இவர்கள் தமது அரசியலை தொடர்ந்தும் கொண்டு செல்லவே இவ்வாறாக முயற்சிக்கின்றனர். அதற்கும் மக்கள் இனிமேல் இடம்கொடுக்க மாட்டார்கள்.

எனவே மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வந்து அதிகாரங்களை கைப்பற்றும் முயற்சி இனியொருபோதும் நடக்கப் போவதில்லை. முடிந்தால் மகிந்த ராஜபக்ஷ அடுத்த தேர்தலில் போட்டியிட்டு வென்று காட்டட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சட்டவிதிமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவீடு

## கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அதிகாரசபை உதவி இணைப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் சட்டவிதிமுறைகளை மீறி விற்பனையில் ஈடுபட்ட 76 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 30ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அதிகாரசபை உதவி இணைப்பாளர் ந.விஜிதரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அதிகார சபையினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலை காட்சிப்படுத்தப்படாமை, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அத்தியாவசியபொருட்களின் அதிகவிலைக்குவிற்பனை செய்தமை, காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, உரிய வியாபார உரிமப் பத்திரம் இன்றி பொருட்கள் விற்பனை செய்தமை, நீண்ட கால இலத்திரனியல் பொருட்களுக்கு குறைந்தது ஆறு மாத கால உத்தரவாதம் வழங்கப்படாமை போன்றகுற்றங்கள்கண்டுபிடிக்கப்பட்டன.

இதேவேளை இவ்வருடம் ஜனவரி மாதம் 2 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக தக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பெப்ரவரி மாதத்தில் 27 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக தக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 21ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது.மார்ச் மாதத்தில் 25 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக தக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 32 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 64 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் 28 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக தக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 23 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 45 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது. மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகள் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தண்டப்பணம் அறவிடப்பட்டது.

இதேபோன்று வர்த்தக நிலையங்களில் சட்டத்துக்கு முரணான வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்றால் கிளிநொச்சி பாவனையாளர் அதிகார சபையினரிடம் முறையிடலாமெனவும் அதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்கு 200 இலட்சம் ரூபா நிதி தேவை

## நிதியமைச்சரிடம் அமைச்சர் றிசாத் வேண்டுகோள்

(வவுனியா)

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் நெல்லினை கொள்வனவு செய்யத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறு வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என வர்த்தக வாணிப கைத்தொழில் அமைச்சின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வர்த்தக வாணிப கைத்தொழில் அமைச்சின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை இடம்பெற்று வருகின்றது. விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை கொள்வனவு செய்வதற்கு போதுமான நிதி தம்மை வந்தடையவில்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 இலட்சம் கிலோவுக்கும், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 20 இலட்சம் கிலோ நெல் கொள்வனவுக்கும்200 இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சருக்கு அமைச்சர் றிசாத் பதியுதீனினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரிவில் உள்ள விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் றிசாத் பதியுதீனுடன் தொடர்பு கொண்டு தமது நெற்கொள்வனவுக்கு தேவையான நிதியினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




# முல்லையில் முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்ற 66பேருக்கு நிதியுதவி

(கிளிநொச்சி)



வடமாகாண சுகாதார புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தம் காரணமாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு இயங்க முடியாத நிலை யில் உள்ள 66 பேருக்கு நேற்று முன்தினம் நிதியுதவி வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மகாநாட்டு மண டபத்தில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பா ளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலை மையில் நடைபெற்றது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 66 பேர் இந்த நிதி உதவியைப் பெற்றுக் கொண்டனர்.இந்நிகழ்வில் , வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூகசேவைகள், புனர்வாழ்வளித்தல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் பி.சத்தியலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்களான அன்ரனி ஜெகநாதன், து.ரவி மோகன்,மருத்துவ கலாநிதி சி.சிவமோகன், முல்லைத்தீவு பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி பூங்கோதை, புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவ கலாநிதி எஸ்.சத்தியரூபன் ,மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ந.தசரத ராஜகுமாரன், பிரதேச செயலக பிரிவுகளின் சமூக சேவைகள் அலுவலர்கள்ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண சபையின் தீர்மானத்திற்கமைய மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இவர்களுக்கென வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக கழுத்திற்கு கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3ஆயிரம் ரூபாவும் இடுப்புக்குக் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரத்து 500ரூபாவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-254)

# வலயமட்ட பெருவிளையாட்டு போட்டிகளின் முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்று முடிந்த வலயமட்ட மெய்வல்லுநர் போட்டியின் பெருவிளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய பாடசாலையின் பெயர் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இதன்பிரகாரம்

15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சதுரங்கப்போட்டி

மு/மல்லாவி மத்தியகல்லூரி, மு/ஒட்டுசுட்டான்மகா வித்தியாலயம், மு/மாங்குளம் மகா வித்தியாலயம்

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சதுரங்கப்போட்டி

மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்

15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரம் போட்டி

மு/யோகபுரம் மகா வித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரம் போட்டி

மு/யோகபுரம் மகா வித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை

15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டம்

மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/விநாயகர்புரம் அ.த.க.பாடசாலை

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டம்

மு/மல்லாவி மத்தியகல்லூரி, மு/ வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/துணுக்காய் அ.த.க.பாடசாலை

15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டி

மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை,மு/ வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கபடிப்போட்டி

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை,மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை,மு/பாலிநகர் மகா வித்தியாலயம்

15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி

மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, மு/மாங்குளம் மகா வித்தியாலயம்

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி

மு/ வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/யோகபுரம் மகா வித்தியாலயம்

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி

மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், மு/மல்லாவி மத்தியகல்லூரி, மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை (தொடரும்) (2-15)

# முல்லை. நகர அபிவிருத்தி பணிகளை உள்ளடக்கி மகஜர் கையளிக்கப்பட்டது

முல்லைத்தீவு உருவான காலத்திலிருந்து இன்றுவரை அபிவிருத்திப்பணிகள் மந்த கதியில் நடைபெற்று வருகின்ற போதிலும் கூட மக்களுக்கு தேவையான நிலையில் அபிவிருத்தித் திட்டங்கள் அமையவில்லை.

அந்த வகையில் முல்லைத்தீவு நகர்ப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முல்லைத்தீவு நகர அபிவிருத்திக்குழுவினால் நேற்று முன்தினம் முதலாவது விசேட கூட்டம் கூட்டப்பட்டு அதில் 16 தீர்மானங்கள் எடுக்கபட்டது.

அந்த 16 தீர்மானங்களை புதிய அரசாங்க அதிபரை முதலில் சந்தித்து அந்த 16 தீர்மானப்பிரேரணை அடங்கிய மகஜரை அரச அதிபரிடம் கையளித்து அதை இந்த வருடத்துக்குள் செயற்படுத்த முல்லைத்தீவு நகர அபிவிருத்திக்குழு தீர்மானித்துள்ளது

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனுக்கும் மாவட்ட நகர அபிவிருத்திக் குழுவுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 4.15 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மேற்படி தீர்மானங்கள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது. அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு.

முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு - தீர்த்தக்கரை -தியோகுநகர் வரையான உள்ளூர் போக்கு வரத்துச சேவையை ஏற்படுத்தல்

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் வரையான உள்ளூர் போக்குவரத்துச்சேவையை ஏற்படுத்தல்.

முல்லைத்தீவு நகர பொதுச் சந்தைக்கு முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் , கிளிநொச்சி, வவுனியா ,திருகோணமலை .மன்னார் ,துணுக்காய் ஆகிய இடங்களிற்குச்செல்கின்ற அனைத்து அரச மற்றும் தனியார் பேருந்துகள் அனைத்தும் முல்லைத்தீவு நகரச்சந்தைக்கு வந்து 10நிமிடங்கள் தரித்து நின்ற பின்பே ஏனைய இடங்களுக்கு செல்ல வேண்டும். மீளவும் அதே பேருந்துகள் வெளியிடத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி வரும் போது முல்லைத்தீவு பொதுச்சந்தைக்கு வந்து 10நிமிடங்கள் தரித்து அதன் பின்பே முல்லைத்தீவு பேருந்து நிலையத்தை சென்றடைய வேண்டும்.

முல்லைத்தீவு கடற்பகுதியில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் அனைத்தும் போருக்கு முன்னைய காலத்தில் இருந்தது போல் முல்லைத்தீவு பொதுச்சந்தைக்கு அனைத்து மீன்களும் சந்தைப்படுத்தலுக்காக கொண்டுவரப்பட வேண்டும்

இலங்கை வங்கியின் பழைமைவாய்ந்த A தர முதன்மைக் கிளை இலக்கம் 511 போருக்கு முன் முல்லைத்தீவு நகரத்தில் இயங்கி வந்தது. தற்போது முல்லைத்தீவு நகர மக்களின் சம்மதம் இன்றி முள்ளியவளைப் பிரதேசத்தில் இயங்கி வருகின்றது இவ் வங்கியின் முதன்மைக் கிளை மீண்டும் முல்லைத்தீவு நகருக்கு கொண்டு வருதல் வேண்டும்.

முல்லைத்தீவு கலாசார மத்திய நிலையம், முல்லைத்தீவு மாவட்ட பொது விளையாட்டு மைதானம், முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பொது நூலகம் ஆகியவற்றை முல்லைத்தீவு நகரில் நிறுவுதல், முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் மூவின மக்களின் நலன் கருதி ஒரு போதனா வைத்திய சாலையை முல்லைத்தீவு நகரத்தில் உருவாக்கல், முல்லைத்தீவு நகரப்பகுதியில் கடந்த காலப் போரில் பகுதிச் சேதமடைந்த நிலையில் 5 வருடங்களாக திருத்தமில்லாத பகுதிச்சேத வீடுகளை இவ் வருடத்திக்குள் திருத்தித்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முல்லைத்தீவு மனவர்களின் நலன் கருதிய வெளிச்ச வீடு ஒன்றை நிறுவுதல்

கொக்கிளாய் முகத்துவாரப் பாலம் புனரமைத்தல், முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் புனரமைத்தல், நந்திக்கடல் வட்டு வாகல் ஆற்றில் மீன்பிடி மற்றும் இறால் தொழிலுக்கு தடையாக உள்ள சேற்றை அகற்றி நந்திக்கடல் பகுதியை ஆழமாக்கல்,

கொக்கிளாய்-முல்லைத்தீவு-சாலை வரையான கரையோரப் பாதையை நிறுவுதல் ஆகியன வாகும். (2)






வவுனியா வடக்கு நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிராமிய வங்கி கட்டடத்திறப்பு விழா நேற்று வடக்கு மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் திறந்து வைக்கப்பட்ட போது.... (படங்கள்: மல்லாவி செய்தியாளர்)

# கரைதுறைப்பற்று பிரதேச சபையில் 17 பணியாளர்களுக்கு நியமனக்கடிதங்கள் அனுப்பி வைத்தார் செயலாளர்

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாண பிரதேச சபைகளில் நிலவுகின்றஅட்டவணைப் படுத்தப்படாத பதவி ஆளணியினருக்கான நியமனங்களின் வெற்றிடங்களுக்கு ஏற்கனவே நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட ஆளணியினரை நியமனம் செய்யுமாறு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் 10,11 ஆகிய தினங்களில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பிரகாரம் 7 அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியினருக்கான பதவி வெற்றிடங்களுக்கு 17 பணியாளர்களின் நியமனங்களுக்குரிய கடிதங்கள் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் ஜெயசீலன் செல்வன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய காவலாளி இரண்டு, சாரதி ஒன்று, வேலைத் தொழிலாளி ஆறு, சுகாதார தொழிலாளி நான்கு, காரியாலய காரிய சகாயர் இரண்டு, மின்னிணைப்பாளர் ஒன்று, கொல்களக்காப்பாளர் ஒன்று ஆகிய 17 பதவிகளுக்குரிய பணியாளர்களுக்கான நியமனக்கடிதங்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் கைது

## முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நந்திக்கடல் நீரேரியில் சட்டவிரோதமானமுறையில் தங்கூசி வலைகள்,முக்கூட்டு வலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு மீனவர்களைக் கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய வலைகள், மீன்வகைகள் ஆகியவற்றை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சட்டவிரோத வலைகள், இரண்டு மீனவர்கள் மீன் வகைகள் ஆகியவற்றை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அன்றைய தினம் அதிகாரிகள் பாரப்படுத்திய போது நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய அவை அழிக்கப்பட்டது டன் மீனவர்களிடமிருந்து குற்றப் பணமாக தலா 5ஆயிரம் ரூபா அறவிடப்பட்டு விடுக்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திமீனவர்கள்மீன்பிடித்துக்கொண்டிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 2மணியில் இருந்து காலை 7மணி வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது தடைசெய்யப்பட்ட வலைகள், மீனவர்கள் மீன்வகைகள் என்பன கைப்பற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறைந்த ஆளணியினருடன் தொடர்ச்சியாக இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்ற போதிலும் மீனவர்கள் தொடர்ந்து இவ்வாறான சட்டவிரோதமான வலைகளைப் பயன்படுத்தி பருமன் அடையாத குஞ்சுமீன் வகைகளைப் பிடிக்க முற்படுகின்றனர்.

இதனால் மீனினம் அழிவடைகின்றது. கடற்றொழிலில் ஈடுபடுபவர்களின் வருமானமும் குறைவடைகின்றது இதனால் மீனவர்கள் சிறந்த இலாபத்தை ஈட்ட முடியாது போகின்றது.

எனவே மீனவர்கள் தாமாகவே சட்டவிரோதமான வலைகளைப்பயன்படுத்துவது நிறுத்தப்படவேண்டுமெனவும் இல்லையேல் எதிர்வரும் காலங்களில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2)

# வரியிறுப்பாளர்சங்க நிர்வாகத் தெரிவு


(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு இடம் பெற்றுள்ளது.

இதனடிப்படை தலைவராக செ.சந்திரகுமார், செயலாளராக க.சிவஞானம், பொருளாளராக ந.கபிநாத், உபதலைவராக ஜே.கார்த்திகேயன, உப செயலாளராக கோ.சிறீஸ் கந்தராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நிர்வாக உறுப்பினர்களாக செ.சபாநாதன், கவசந்தரூபன், எம்.எஸ்.எம்.கலீல், ரி.ஞானசீலன், வை.கருணாநிதி, இ.சஜீந்திரா, ஜே.பி.கிறிஸ்தோபர், மாணிக்கம் ஜெகன், தி.கோபிநாத் எஸ்.பொன்னம்பலம், கணக்காய்வாளராகலசதீஸ குமார், போசகராக றோய் ஜெயக்குமார் நா.சேனாதிராஜா ஆகியோர் தெரிவாகினார். (2-250)




# மூன்று அபாயக் கனவுகள்



கோகர்ண ராஜ்யத்து மன்னரான மணிகண்டர் பரந்த நோக்கும், நேர்மையான குணங்களும், தர்மசிந்தனையுமுள்ளவர்! சிறந்த பக்திமான்! சாது, சன்னியாசிகளை மிகவும் மதித்துப் போற்றுபவர்!

ஒரு நாள், அவருடைய அரண்மனைக்கு ஜடாதரர் என்ற முனிவர் வருகை புரிந்தார். மணிகண்டர் அவரை நன்கு உபசரித்தார். அதனால் மனம் மகிழ்ந்த ஜடாதரர் மன்னரை மனதார ஆசீர்வதித்து விட்டு 'மணிகண்டா! நீ இன்று இரவு தொடங்கி, தொடர்ந்து மூன்று இரவுகள் விபரீதமான கனவுகளைக் காண்பாய்! அவை உனக்கு வரப் போகும் அபாயத்தை சூசகமாக உணர்த்தும். அதற்கேற்றாற்போல், நீ சமயோசித புத்தியுடன் நடந்து கொண்டால், வரப்போகும் அபாயங்களிலிருந்து தப்பலாம்!' என்று கூறி விட்டுச் சென்றார்.

முனிவரின் எச்சரிக்கையைக் கேட்டு பதறிய மன்னர் தன்னுடைய மந்திரிகளை அழைத்து அவர்களிடம் அனைவற்றையும் கூறி அதைத தடுக்கும் வழியைப் பற்றி கேட்டார். விவேகன் என்ற மந்திரி, 'மகாராஜா! கனவுகளே தோன்றாமல் தவிர்த்துவிட்டால், பின்னர் அபாயமே ஏற்படாது. ஆகவே, நீங்கள் இன்று முதல் மூன்று இரவுகள் உறங்காமல் விழித்திருங்கள்!' என்றார்.

மன்னருக்கு வேறு எதுவும் யோசனை தோன்றாததால், விவேகன் கூறியவாறே செய்யத் தீர்மானித்தார். ஆனால், முதல் நாள் இரவு, முழுவதும் சிரமப்பட்டு சதுரங்கம் விளையாடி உறங்காமலிருந்தும், விடியும் சமயத்தில் சற்றே கண்ணயர்ந்து விட்டார்.

அந்த சிறிது நேர உறக்கத்திலேயே அவருக்கு ஒரு கனவு உண்டாகி விட்டது.

தான் ஒரு காட்டினுள் இருப்பது போலவும், தன்னை நோக்கி ஒரு நாக பாம்பு சீறிப்பாய்வதையும் கண்டார். மறுநாள் இரவு, அவர் பாட்டுக் கேட்டுக் கொண்டே தூங்காமல் இருக்க முயற்சி செய்தார். ஆனால் அன்றும் சிறிது நேரம் தன்னை அறியாமல் உறங்கிப் போனார். கனவில், வானிலிருந்து இடியும், மின்னலுமாக அவரைத் துரத்தி வந்தது. உடனே, மன்னர் விழித்துக கொண்டார்.



மூன்றாவது இரவில், அவர் ராஜகுருவை அழைத்து புராணக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்க, இடையில் அமர்ந்தவாறே உறங்கிப் போனார். அன்று கனவில் அவரை ஒரு சிங்கம் துரத்த, அவர் ஓடிச் சென்று ஒரு குளத்தில் குதித்தார். அந்தக் குளம் முழுவதும் இரத்தம் நிரம்பியிருந்தது. குளத்தில் மூழ்கி அவர் மூச்சுத் திணறும்போது, அவருடைய மகள மணிமேகலை அவர் கையைப் பிடித்து மேலே தூக்கிவிட்டாள்.

மறுநாள் காலை மந்திரிகளை அழைத்த மன்னர், அதுவரை தான் கண்ட கனவுகளைக் கூறி அவற்றின் விளக்கம் கேட்டார். நீண்ட நேரம் ஆலோசனை செய்த மந்திரிகள் மன்னருக்கு பாம்பினால் அல்லது மின்னலினால் அல்லது சிங்கத்தினால் ஆபத்து நேரிடப் போகிறது என்றும், ஆகையால் மன்னர் அரண்மனையை விட்டு எங்கேயும் வெளியே செல்லக் கூடாது என்றும் அறிவுரை கூறினர்.

(தொடரும்)




- 313 - உரோமப் பேரரசின் மன்னன் லிசீனியஸ் அனைத்து கிழக்கு உரோமப் பேரரசையும் ஒன்றாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.
- 1006 - மிகவும் ஒளி கூடிய சுப்பர்நோவா எஸ்.என் 1006 லூப்பஸ் என்ற விண்மீன் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது.
- 1483 - இந்த நாளில் புளூட்டோ நெப்டியூனின் சுற்று வட்டத்துள் வந்தது. இது அங்கு ஜூலை 23, 1503 வரை அங்கு இருந்தது.
- 1803 - ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடமிருந்து 15 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியது.
- 1838 - நிக்கராகுவா மத்திய அமெரிக்கக் கூட்டமைப்பிலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியானது.
- 1945 - அடொல்ஃப் ஹிட்லர் தனது மனைவியுடன் தற்கொலை செய்து கொண்டார். சோவியத் படையினர் பெர்லினில் ஜேர்மனிய நாடாளுமன்றில் செங்கொடியை ஏற்றினர்.
- 1975 - வியட்நாம் போர்: கம்யூனிசப் படைகள் சாய்கோன் நகரைக் கைப்பற்றினர். தென் வியட்நாமியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்ததில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்தது.
- 1982 - திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1993 - ஜெனீவாவில் ஐரோப்பிய அணுக்கருவியல் ஆய்வு அமைப்பில் உலகளாவிய வலையமைப்பு பிறந்தது.
- 1999 - ஆசியான் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.
- 2006 - ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட சூரியநாராயணா என்ற இந்தியப் பொறியியலாளர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

பிறப்புகள்

- 1777 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலாளர் (இ. 1855)
- 1870 - தாதாசாஹெப் பால்கே, இந்திய திரைப்படத்துறையின் முன்னோடி (இ. 1944)
- 1959 - சிரீபன் கார்ப்பர், கனடாவின் 22ஆவது பிரதமர்

இறப்புகள்

- 1945 - அடெல்ஃப் ஹிட்லர், ஜேர்மனியை ஆண்ட ஆஸ்திரிய சர்வாதிகாரி (பி. 1889)
- 1961 - லோங் அடிகள், யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த அயர்லாந்து அடிகள் (பி. 1896)

## அடெல்ஃப் ஹிட்லர்



அடெல்ஃப் ஹிட்லர் காஸ்தாப் ஜ"ம் பொம்மர் என்னுமிடத்தில் 20 ஏப்ரல், 1889 இல் தாய் கிளாரா போல்ஸ், தந்தை அலாய்ஸ் கிட்லருக்கும் ஆறு குழந்தைகளில் நான்காவது குழந்தையாக பிறந்தார்.

இவருடன் பிறந்த நால்வர் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். எஞ்சியவர்கள் அடெல்ஃப் கிட்லரும் அவரின் கடைசி தங்கை பவுலா கிட்லர் மட்டும்தான். ஜேர்மனியின் நாசிக் கட்சியின் தலைவராக விளங்கியவர்.

அவர் 1933 ஆம் ஆண்டு ஜேர்மனி நாட்டின் சான்சலராக நியமிக்கப்பட்டார். பின்பு 1934 ஆம் ஆண்டு, ஜேர்மனி நாட்டின் தலைவரானார். 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதியன்று தற்கொலை செய்து கொண்டது வரை அவர் அப்பதவியில் தொடர்ந்தார்.

ஜேர்மனி நாட்டின் ஃபியூரர் என அழைக்கப்பட்டார். இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ஸ்டாலினின் செம்படைகளிடம் ஜேர்மன் தலைநகர் பெர்லினில் கிட்லரின் நாசிப்படைகள் வீழ்ச்சியுற்றது. அப்படைகள் அவரை நெருங்குவதற்கு முன் தன் கைத்துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவரோடு அவர் மனைவி இவா பிரானும் தற்கொலை செய்து கொண்டார்.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**வெள்ளத்தில் மீனா**

இப்போது பட்டணத்துக்குப்போய் தனது பாடகர் கனவை நிறைவேற்ற விரும்புகிறார். திடீரென ஊருக்குள் புகுந்த வெள்ளத்தில் மனைவி மீனா ஆற்றோடு அடித்துச் செல்லப்படுகிறார். அவர் இறந்து போனதாகவே ஊரும் உறவும் முடிவு செய்கிறது. ஆனால் இறக்கவில்லை.

சோகத்தோடு சென்னை வரும் ரஜினிக்கு, ரோஜா மூலம், இசைத்தட்டிலும் கேசட்டிலும் பாடும் வாய்ப்பு கிடைக்கிறது. அந்தக் குரல் ரசிகர்களுக்கு பிடித்துப்போக, இசை உலகில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறார்.

**மீண்டும் திருமணம்**

தனது முன்னேற்றத்துக்கு காரணமான ரோஜாவுக்கு மனப்பூர்வமாக நன்றி சொல்கிறார். அப்போதுதான் தன்னை ரோஜா காதலிக்கிறார் என்பது புரிகிறது. மீனாவை இழந்த சோகத்தில் அவர், ரோஜாவை மணக்க விரும்பவில்லை. என்றாலும், தாயாரின் விருப்பத்தை தட்ட முடியாமல் 2 ஆம் திருமணம் செய்து கொள்கிறார்.

இந்த நேரத்தில் ரஜினியை சந்திக்க சென்னை வருகிறார், மீனா.

இறந்து விட்டதாக கருதிய மீனா உயிரோடு வந்ததைப் பார்த்து ரஜினி அதிர்ச்சியடைகிறார். மீனா இறந்துவிட்டதாக கருதி, வேறொரு பெண்ணை மணந்து கொண்டதை சொல்ல முடியாமல் தவிக்கிறார். அவசரம் அவசரமாக தனி வீடு பார்த்து மீனாவை தங்க வைக்கிறார்.

ரஜினி ஏற்கனவே திருமணம் ஆனவர் என்ற விடயம் ரோஜாவுக்கும் அதுவரை தெரியாது.

இரண்டு மனைவியரிடமும் நடிக்க வேண்டிய நிலை ரஜினிக்கு ஏற்படுகிறது. மீனாவுக்கோ, ரோஜாவுக்கோ தனது நடவடிக்கையில் ஏதாவது சந்தேகம் தோன்றினால் கூட, அதை சமாளிக்க பெரும்பாடுபடுகிறார்.

இந்த சமயத்தில் ரோஜாவால் ஜெயிலுக்கு




அனுப்பப்பட்ட மகேஷ், விடுதலையாகி வருகிறான். அவனுக்கு முத்துவின் 'தேவியர் இருவர்' நிலை தெரிந்து விடுகிறது. அதை வைத்துக்கொண்டு முத்துவை 'பிளாக் மெயில்' செய்ய நினைக்கும் வில்லன் அதில் வெற்றி பெறாததால் ரோஜா, மீனா இருவரையும் கடத்திச் செல்கிறான்.

வில்லனை பின்னியெடுக்கும் ரஜினி, ரோஜா, மீனா இருவரையும் மீட்கிறார். அப்போது அவர் ஏற்கனவே மீனாவை மணந்தவர் என்பது ரோஜாவுக்கு தெரியவருகிறது. அதேநேரம் தன் காதல் கணவர் இப்போது இன்னொரு பெண்ணுக்கும் கணவர் என்பது மீனாவுக்கும் தெரிந்து போகிறது.

நட்புடன் இருந்த மீனாவும், ரோஜாவும், கணவர் யாருக்கு என்பதில் மோதிக்கொள்கிறார்கள். இதனால் மீண்டும் கிராமத்துக்குத் திரும்புகிறார். அங்கே, மீனாவும், ரோஜாவும் தன்னை வரவேற்கக் காத்திருப்பதைக் கண்டு மகிழ்கிறார். சுபமாக கதை முடிகிறது.

**நகைச்சுவை விருந்து**

படம் முழுக்க ரஜினியின் நகைச்சுவை சரவெடிகள், ரசிகர்களை கலகலப்பாக வைத்திருந்தன. ரஜினியும், செந்திலும் சேர்ந்து பாட்டு கம்பெனியில் சான்ஸ் கேட்கும் காட்சிக்கு ரசிகர்கள் குலுங்கிச் சிரித்தார்கள்.

மீனாவிடமும், ரோஜாவிடமும் மாட்டிக்கொண்டு 'முழிக்கும்' காட்சிகளில் நடிப்பில் பிரமாதப்படுத்தியிருந்தார், ரஜினி.

படத்தின் மிகச்சிறந்த அம்சங்களில் ஒன்று இளையராஜாவின் இசை. 'கொஞ்சி கொஞ்சி அலைகளாட', 'மலைக்கோவில் வாசலிலே', 'மாடத்திலே கன்னி மாடத்திலே', 'யக்கா யக்கா பெட்டிக்கடை யக்கா யக்கா', 'வாடி வெத்தல பாக்கு வாங்கித்தரேன் போட்டுக்க' என அத்தனை பாடல்களிலும் 'ராஜா'வின் இசைக்கொடி உயரப் பறந்தது. படத்தின் ஆடியோ கேசட் விற்பனையில் சாதனை படைத்தது.

ரஜினியின் 'டேஸ்ட்' அறிந்து படத்தை இயக்கியிருந்தார், டைரக்டர் சுரேஷ் கிருஷ்ணா.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்



**வைரமுத்து–128**

..மாப்ள! கேப்பக்களி போட்டுட்டான் மாமன்னு கேவலமா நெனச்சிராதீக. வீடு போய்ச் சேந்ததும் மொத வேலையா இத அடிச்சுக் கொழம்புவச்சு ஆசையாக் குடிங்க... இந்தாங்க.

கெக்கக் கெக்க கெக்கன்னு கத்துற சேவலக் கால்ல சரடுகட்டிக் கொண்டாந்து நீட்டி மாப்பிள்ளைக்கு சீர் செய்யிறாரு மாமனாரு.

சேவலப் பாத்ததும் கல்லு சிரிக்கிற மாதிரி சிரிக்குது இறுகிப்போன முத்துக்காமு மூஞ்சி. வலது கையில புடிச்ச குடைய மாத்தாம எடது கையில சேவல வாங்கி எடை போட்ட பய, ஒரு வீசைக்கு மேல ஒண்ணேகாலுக்குள்ளன்னு முணுமுணுத்துக்கிட்டான் எச்சி ஊறுற வாயில.

திடீர்ன்னு அவன் மூஞ்சி மாறுது; மேலுதட்டுல பெறந்த சிரிப்பு கீழுதட்டுல செத்துப்போகுது.

சேவல் இருக்கட்டும் மாமு. செய்முறைக் காச எவகிட்டக்குடுத்தா? மூத்தவகிட்டயா? இளையவகிட்டயா?

மூத்தவகிட்டத்தான்.

செத்துப்போன ராமர்படை சஞ்சீவி மலை வந்தவுடன் எந்திரிச்ச மாதிரி, அவன் உதட்டுல செத்துக் கெடந்த சிரிப்புக்கு உசுர் வந்திருச்சு திரும்பி.

பழனி செட்டிபட்டி வந்து சேந்தப்ப கெடை மாடுக வீடுவர நேரமாகிப் போச்சு.

வீடு தெறந்து உள்ள போனவுடன தங்கச்சிய வெளக்கேத்தச் சொன்னா அக்கா; திரியில கற்பூரம் வச்சுத் திரிச்சும் விட்டா.

இந்தாங்கடி பசி உசுர் போகுது. பச்சநெல்லக் குத்தி கஞ்சி காச்சுங்க. நான் சேவல அடிச்சுப் பறிச்சு உரிச்சுக் குடுக்கிறேன். சொன்ன வேகத்துல முத்துக்காமு அவரு மாணையில வச்சுக் கரகரகரன்னு கழுத்தறுத்தான் சேவல. ஒழுகுன ரத்தத்தைக் கரண்டியில புடிச்சு அதுல ரெண்டு மூணு உப்புக்கல்லும் போட்டு ஓரமா வச்சான். சேவலப் பறிச்சு வாட்டி அறுத்துக்குடுத்திட்டு கரண்டியில இருந்த கோழி ரத்தத்த அவனாப் பொரிச்சு அவனாத் தின்டுபுட்டான். ஒங்க அப்பன் மாதிரியே சேவலும் கொஞ்சம் முத்தலாயிருக்கதடியம்மா. ஒரு அடு



ப்பு சேத்தே எரிங்கன்னு சொல்லிப்பிட்டு வைரமோதி ரத்தப் பட்டிதொட்டியெல்லாம் காட்டிப் பகுமானம் பண்ண மந்தைக்குக் கௌம்பிட்டான் முத்துக்காமு.

பச்ச நெல்ல ஒரல்ல கொட்டி மாத்தி மாத்தி ஒலக்க போடுறாக அக்கா தங்கச்சிக ரெண்டுபேரும். புழுங்க நெல்லா இருந்தாப் போடு போடுன்னு போடலாம்; இது பச்ச நெல்லு. ஓங்கி ஒலக்க போட்டாக் குறுணையாப் போகும்ன்னு தாங்கி ஒலக்க போடுறாக. ஒரல்ல குத்துனத அள்ளிப் பொடச்சதுல ஒன்றரைப்படி அரிசி தேறுது.

*(தொடரும்)*

## 19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக

# ஜனாதிபதியின் அதிகாரங்கள் அனைத்தும் குறைக்கப்படாது

### சரத் வீரசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

**19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அனைத்து அதிகாரங்களும் குறைக்கப்படாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியின் அனைத்து நிறைவேற்று அதிகாரங்களும் இந்த திருத்தச் சட்டத்தின் ஊடாக குறைக்கப்படாது என்பது பலருக்கு தெரி யாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைய்ய முற்றாக இல்லாதொழிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

இதன் காரணமாகவே அரசாங்கம் சில சரத்துக்களை நீக்கிக் கொண்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களின் ஊடாக பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர் பதவிகளின் நியமனாங்களின் போது அவர் ஜனாதிபதிக்கு விசுவாசமானவரா என்ற கேள்வி எழும்புகின்றது.

இந்த நிலைமையானது தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடுமென திகாமடுல்ல மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வரசேகர தெரிவித்துள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டம் குறித்து நேற்றுமுன்தினம் நாடாளுமன்றல் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

# 19 ஆவது திருத்தச்சட்டம் எதையும் சாதிக்கவில்லை



இலங்கை ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டு பதவிக் காலங்கள் என்று மீண்டும் குறைத்தது மற்றும் தகவல் அறியும் உரிமை என்ற இரு விடயங்களைத் தவிர, 19 ஆவது சட்டதிருத்தத்தின் மூலம் மைத்திரிபால சிறிசேன பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என சட்ட ஆய்வாளர் குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மையுடன் நிறைவேறிய இந்த சட்டதிருத்தத்தின் மூலம், பொது ஸ்தாபனாங்களுக்கு அரசியல் தலையீடு இல்லாமல் நியமனாங்களைச் செய்ய உருவாக்கப்பட்ட அரசியல் சட்ட அவையில் பெரும்பான்மையாக அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் இருக்கவேண்டும் என்ற யோசனையைக் கைவிட்டு, இப்போது அந்த அவையில் பத்தில் ஏழு பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பார்கள் என்ற முடிபுக்கு வர அரசு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிர்ப்பந்தம் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களால் தரப்பட்டு அதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசு பணிந்திருக்கிறது .

ரணில் விக்கிரமசிங்க இதற்கு பணிந்திருப்பதற்குக் காரணம் , அது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த 19 ஆவது சட்டதிருத்தத்தை நிறைவேற்றியதாகக் காட்ட வேண்டும் என்ற ஆர்வம் தான் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 21ம் நூற்றாண்டின் செல்வாக்குமிக்க சிந்தனையாளராக கார்ல் மார்க்ஸ்



**கார்ல் மார்க்ஸின் ஜனனதினம் 05.05.1818 ஆகும். இதனை நினைவுகூரும் முகமாக இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

கார்ல்மார்க்ஸ் என்னும் மாபெரும் சிந்தனையாளர் இவ்வுலகில் பிறந்து இரு நூற்றாண்டுகள் ஆகப் போகின்றது. இவர் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிறந்து 05.05.1818 இறுதியில் மறைந்தார். இவரது இயங்கியல் பொருள் முதல்வாதம் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பன தத்துவம், மானிட சமூக மாற்றம் என்பனவற்றிற்கு ஆற்றிய பங்கு மகத்தானது. கார்ல் மார்க்ஸ் தத்துவஞானிகள் உலகத்தை பல்வேறு வழிகளில் வியாக்கியானம் செய்திருக்கின்றார்கள். ஆனால் பிரச்சினை என்னவெனில் இவ்வுலகத்தை எவ்வாறு மாற்றுவது என்பதேயாகும் எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றுத் தத்துவஞானம் உலக மாற்றத்தில் எத்தகைய பங்கை வகிக்கவேண்டும் என்பதை பறைசாற்றி நிற்கின்றது.

19 ஆம் நூற்றாண்டில் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காக போராடிய மார்க்ஸ் தொழிலாளர்கள், தத்துவ ஞானத்தைக் கற்கவேண்டும் தத்துவஞானம் தொழிலாளர்களின் பொருள் முதல் வாதத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்கின்றார். இதன்மூலம் பொருள்முதல்வாத தத்துவத்தின் வளர்ச்சிக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிக்கும் வழிகாட்டினார். 20 ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களும் மார்க்சீய எழுச்சிக்கு வித்திட்ட காலமாகும். 1917 இல் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியும் விளைந்த போர்க் காலப் பொதுவுடைமையையும் ஆகும். இதனால்தான் லெனினின் புரட்சிகரக் கோட்பாடுகளும் அனுபவங்களும் 20 ஆம் நூற்றாண்டின் மார்க்ஸிஸம் என்கின்றார்கள். பின்னர் சோவியத் ஒன்றியம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டது. ஒருநாட்டில் சமதர்மம் நீண்டகாலத்தில் சாத்தியமாகுமா? எனும் சித்தாந்த நடைமுறைப் பிரச்சினை ஏற்பட்டு ஜோசப் ஸ்டாலின் சர்வாதிகாரியானதோடு லியோன்ட்ரொஸ்கி படுகொலை செய்யப்பட்டார்.

1949, 1959களில் முறையே ஏற்பட்ட சீனப்புரட்சியும் கியூபப் புரட்சியும் மீண்டும் மார்க்கஸீயத்தின் எழுச்சிக்கு வித்திட்டன எனலாம். பின்னர் 1975 களில் ஏற்பட்ட புரட்சியும் முக்கியமானதாகும். 1990 களில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சமதர்மத்தின் வீழ்ச்சி மார்க்ஸியத்திற்கு ஏற்பட்ட வீழ்ச்சியாகக் கருதப் படுகிறது. ஆனால் மார்க்ஸீய தத்துவம் வெற்றி, தோல்வி, எழுச்சி, வீழ்ச்சி இரண்டையும் அனுபவ நோக்கில் பார்க்கின்ற இயங்கு- இயலாகும். இதனால் அன்றோ 2005 ஆம் ஆண்டளவில் பிபிசி றேடியோ 4 அலைவரிசை நடத்திய கருத்துக்கணிப்பில் அதன் நேயர்கள் தங்கள் அபிமான சிந்தனையாளராக கார்ல் மார்க்ஸையே தெரிவு செய்தார்கள். இதற்கான காரணம் என்ன? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்மூலம் சோசலிஸ கட்டமைப்பு நிர்மாணிக்கப்படுகின்றது. இதற்கான அத்திபாரம் உற்பத்தி சக்திகள் எனப்படுகின்ற கட்டடம் இயந்திரங்கள், பணம், மனிதவலு, விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்பனவாகும். உற்பத்தி உறவு, தொழிலாளி- தொழிலாளி உறவு என்பதாகும். அடிப்படையில் சோசலிஸ கட்டமைப்பு அறிவு சமுதாயத்தை நோக்கிய ஒன்றாகும். மார்க்ஸ்சும் ஏங்கெல்சும் சேர்ந்து எழுதிய கற்பனா சோசலிஸமும் விஞ்ஞான சோசலிஸமும் என்னும் நூலில் விஞ்ஞான சோசலிஸத்தையே குறிப்பிடுகின்றார்கள். விஞ்ஞான சோசலிஸம் என்பது அறிவுச்சமுதாயமாகும்.


ஆனால் இன்றோ சமதர்மத்தைத் தோல்வியடைச்செய்து மீண்டும் முதலாளித்துவம் ஒரு முனைப்படுத்திய உலகமயமாகிய ஏகாதிபத்தியத்தினுள் அறிவுச் சமுதாயத்தை உருவாக்கும் சித்தாந்தத்தை போதிக்கின்றார்கள். தாராளவாத ஜனநாயகத்தின் ஊடாக தகவல் தொழில் நுட்ப அறிவுக்களத்தில் அறிவுத்தொழிலாளர்கள் உருவாகின்றார்கள் எனவும் இவர்களே மூலதனத்தை, நிறுவனத்தை ஆளுகின்றார்கள் எனவும்பிரபல முகாமைத்துவசிந்தனையாளர் பீட்டர் ஃட்ரக்கர் குறிப்பிடுகின்றார். இதுவேறுபாடுகள் நிறைந்த சுரண்டலைஅடிப்படையாகக்கொண்ட கட்டமைப்புக்குள் சாத்தியமாகுமா? ஆனால் லெனின், மாஓ சேதுங் போன்றோர்கள் சோசலிஸ நிர்மாணத்தின் மூலம் அறிவுத் தொழிலாளர்களை உருவாக்கினார்கள். ஆனால் இவை நீடித்து நிலைத்து நிற்காமைக்கு பல வரலாற்று சித்தாந்த காரணங்கள் உண்டு. இதற்கு மருந்தாகவே லியோன்ட்ரொஸ்கி நிரந்தரப் புரட்சிக்கோட்பாட்டை முன்வைத்தார்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடிகள், கிரேக்கம், பிரான்ஸ், நாடுகளில் ஏற்பட்ட தொழிலாளர் கிளர்ச்சிகள் முதலாளித்துவத்தின் அடிப்படைப் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றன. டுனிசியா, எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சிகள் நீண்டகால சர்வாதிகாரம், பொருளாதாரச் சுரண்டல்களுக்கு எதிரானபோராட்டங்களாகும். இவை மார்க்ஸின் தொடர்ச்சியான வர்க்கப் போராட்டம், பொருளாதாரப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை என்பவற்றையே நினைவுபடுத்துகின்றன. இதனால் அன்றோ கார்ல்மார்க்ஸ் 21 ஆம் நூற்றாண்டில் அபிமானம் மிக்க சிந்தனையாளராக எம்மத்தியில் ஜீவிக்கின்றார்.

**பி.முத்துலிங்கம்**
**ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**தென்மராட்சிகல்வி வலயம்.**

# பிழையைத் திருத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாம்

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



**(கொழும்பு)**

**18ஆம் திருத்தச் சட்டத்திற்கு வாக்களித்து செய்த பிழைகளை திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் 19 ஆம் திருத்தச் சட்டம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவா இதனைத் தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டத்திற்கு சில யோசனைகளை முன்வைத்து,வெறும் நோக்கங்களை அடைந்து கொள்ள முயற்சிக் கின்றனர்.

தேர்தலின் போது ஜனாதிபதி அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்து சிறுபான்மை மக்களின் கருத்து கோரப்பட வேண்டும்.தேசியக்கொடி மாற்றிய மைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டமை ஆச்சரியமளிக்கின்றது.

இவ்வாறான ஓர்நிலைமை மீளவும் இடம்பெற இடமளிக்கப்பட முடியாது என ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு மே 22 முதல் விசாரணைக்கேற்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தொழிற்சங்க ஆலோசகர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பான வழக்கு, எதிர்வரும் மே மாதம 22ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு மேல நீதிமன்றம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

குறித்த வழக்கு, நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பவித்ரா தென்னகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளபட்டது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட பிரதிவாதிகள் 12 பேர் நீதிமன்றில் ஆஜராகியிருந்த போதிலும் வழக்கின்பிரதான பிரதிவாதியான பிரியந்த ஜனக என்பவர் நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

குறித்த நபருக்கு அழைப்பாணை விடுப்பதில்சிக்கல் உள்ளதாகவும் அதனை செய்ய முடியாது போனால்அவர்இன்றி விசாரணை நடத்துமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்தார்.இதேவேளை, குறித்த வழக்கின் பிரதிவாதி யான சுமிந்த டி ஜயனாத் 10 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ)

# கொலன்னாவ தொகுதி யாருக்கு துமிந்தவுக்கா? ஹிருணிகாவுக்கா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் விடயத்தில் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை சம்பவத்தில் பிணையில் அனுமதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும், மேல்மாகாணசபை உறுப்பினரும் பாரதலக்ஸ்மனின் மகளுமான ஹிருணிகா பிரேமச் சந்திரவுக்கும் இடையில் இந்த பிரச்சினை உருவாகியுள்ளது.

தமக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கொலன்னாவ அபிவிருத்தியை கைவிடப் போவதில்லை என்று துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றதன் பின்னர் அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.


இதேவேளை கொலன்னாவ தொகுதிக்காக ஜனாதிபதி தம்மை பரிந்துரைத்தால் தாம் தொகுதிக்கான பணிகளை முன்னெடுத்துச் செல்லப்போவதாக ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 50 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 | 60 | 30 | 40 |
| தக்காளி | 40 | 60 | 40 | 60 | 30-40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 60 | 40 | 50 |
| கோவா | 40 | 30 | 40 | 50 | 40 | 30 |
| கரட் | 120 | 80 | 110 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 40 | 50 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 100 | 50-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 60 | 100 | 70 | 80 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 140 | 40 | 50 | 60-90 | 80 |
| கருணைக் கிழங்கு | — | 80 | 60 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 50 | 50 | 40 | 50 | 50 |
| லீக்ஸ் | 180 | 120 | 100 | 160 | 140 | 160 |
| பீற்றூட் | 60 | 50 | — | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 80 | 60 | 90 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 500 | 400-600 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 100 | 160 | 120-180 | 180 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 30 | — | — | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 130 | 140 | 150 | 150 | 140 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 35 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 130 | 120 | 110 | 100 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 40 | 40 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 356

சுஜே செல்வா




திலீப் குமார்




சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




சுஜன் சுஜமுகன்



கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# மகிந்த சட்டங்களுக்கு அப்பாற்பட்டவரா?

மஹிந்த ராஜபக்ச ஒன்றும் கடவுள் அல்ல. இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை, 19 ஆவது திருத்தச்சட்ட மூலம் மீதான விவாதம் பாராளுமன்றத்தில் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், நடத்திய செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் வாக்கு மூலம் பெறுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாராளுமன்றத்துக்கு வெளியிலும் உள்ளேயும் நடத்தப்பட்ட போராட்டங்கள் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இந்தளவுக்கும் சம்பிக்க ரணவக்க, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்சவை போட்டியிட வைப்பதிலும், போட்டியில் வெற்றி பெற வைத்ததிலும் முக்கிய பங்காற்றியவர்.

அதுபோலவே, அவரைப் பதவியிலிருந்து இறக்கி, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகப் பதவியில் அமர்த்துவதிலும் சம்பிக்க ரணவக்கவின் பங்கை குறைத்து மதிப்பிட முடியாது.

ஆனால், இப்போது அவர்தான், 'மஹிந்த ராஜபக்ச ஒன்றும் கடவுள் இல்லை' என்று கூறியிருக்கிறார்.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைக்கு மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு தெரிவிக்கப்பட்ட தேவையற்ற எதிர்ப்புகள் குறித்தே அவரை இத்தகைய கருத்தை வெளியிடத் தோன்றியிருக்கிறது.

இந்தளவுக்கும், சம்பிக்க ரணவக்க, ஜனாதிபதி தேர்தல் காலத்தில், மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக எந்த விசாரணைகளை நடத்தவும் அனுமதிக்க முடியாது என்று கூறியிருந்தார்.

இருந்தாலும், குற்றச்சாட்டு ஒன்று வரும்போது, அதற்கு முகம் கொடுப்பதற்குப் பதிலாக, மஹிந்த ராஜபக்ச குறுக்கு வழியில் அதனைத் தவிர்க்க முனைவது தான், சம்பிக்க ரணவக்கவை ஆத்திரம் கொள்ள வைத்திருக்கிறது.

சட்டத்தின் முன்பாக அனைவரும் சமமானவர்கள். குற்றச்சாட்டு ஒன்றிலிருந்து விலக்குரிமை பெறுவதற்கு மஹிந்த ராஜபக்ச ஒன்றும் ஜனாதிபதியல்ல. முன்னாள் ஜனாதிபதிதான்.

அவருக்கு மட்டும் எந்த விதிவிலக்கும் இருக்க முடியாது என்பது சம்பிக்க ரணவக்க மட்டுமன்றி, அரச தரப்பிலுள்ள எல்லோரதும் கருத்தாக வெளிப்பட்டுள்ளது. நடுநிலையாக உள்ள தரப்பினரும் கூட மஹிந்த ராஜபக்ச குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைக்கு முகம் கொடுத்து, அது பொய்யானது என்று நிரூபிக்க முயற்சிக்கலாம் என்றுதான் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், எதிர்க்கட்சியிலுள்ள, மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களால், இந்த விசாரணை அழைப்பை பொறுத்துக் கொள்ள முடியாமல் போனது.

மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராகவோ, கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகவோ, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் நாட்டில் இரத்த ஆறு ஓடும்' என்று எச்சரித்தார் முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அழுத்தமகே.

மற்றொரு மூத்த அமைச்சரான பந்துல குணவர்தன, 'போரை முடித்து வைத்த முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக எப்படி அழைப்பாணை அனுப்ப முடியும். அவரை எவ்வாறு விசாரிக்க முடியும்'? என்று கேள்வி எழுப்பினார்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, ஆட்சியிலிருக்கும் போது எதைச் செய்திருந்தாலும், அதற்காக ராஜபக்ச குடும்பத்தினர் தண்டிக்கப்படவோ விசாரிக்கப்படவோ கூடாது என்ற உறுதியில் அவர்கள் இருப்பது புலப்படுகிறது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த விவகாரம் வேறு. போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்பதற்காக அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அனைத்தையும், நாட்டின் சட்டங்கள் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அயோக்கியத்தனமான அரசியல் தீர்மானம்.

மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஒரு வாக்குமூலம் பெறுவதற்கே எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களில் இறங்கிய அவரது ஆதரவாளர்கள், சட்ட ரீதியாக அவர் குற்றவாளியாக காணப்பட்டு, தண்டிக்கப்படும் நிலை ஒன்று ஏற்பட்டால், எவ்வாறு செயற்படுவார்கள் என்று யோசித்துப் பார்க்கவே முடியவில்லை.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், பல தவறுகள் நடந்திருக்கின்றன. இதனை அவரே, ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் ஒத்துக் கொண்டிருக்கிறார். அதற்காக அவர் மன்னிப்பும் கேட்டிருந்தார்.

அவ்வாறிருக்க, மஹிந்த ராஜபக்சவோ அல்லது அவரது ஆதரவாளர்களோ குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளத் தயங்குவது மட்டும் ஏன் என்று புரியவில்லை.

குற்றம் செய்யாதவர்கள் விசாரணைக்கு முகம் கொடுத்து, தம்மை நிரபராதிகளாக நிரூபிக்க முடியும். அதற்கு மஹிந்த ராஜபக்ச தரப்பு மட்டும் ஏன் தயங்குகிறது என்பதுதான் கேள்வியாக எழுப்பப்படுகிறது.

நாட்டுக்காக மின்சார நாற்காலியில் கூட அமரத் தயார் என்றவர், இந்த விசாரணைக்கு முகம் கொடுக்க மறுப்பது, அவரதும் அவரது தரப்பினரதும் இன்னொரு முகத்தை வெளிக் காட்டுகிறது.

மஹிந்த ராஜபக்சவும் சரி, கோத்தபாய ராஜபக்சவும் சரி, தாம் ஆட்சியிலிருந்த போது எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று அறிக்கைகள், பேட்டிகளின் மூலம் திரும்பத் திரும்ப கூறி வருகின்றனர்.

வெறும் அறிக்கைகளின் ஊடாக மட்டும் அவர்கள் நாட்டு மக்களை நம்ப வைக்க முடியாது. ஏனென்றால், அவர்களின் கடந்த ஆட்சி அந்தளவுக்கு மோசமானதாக அமைந்திருந்தது. அதனை நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் நேரடியாகவே அனுபவித்தவர்கள்.

அவர்கள் மத்தியில், தாம் நிரபராதிகள் என்பதை நிரூபிக்க வேண்டுமானால், இவர்கள் நிச்சயம் அக்கினிப் பிரவேசம் செய்தேயாக வேண்டும். அதாவது விசாரணைகளில் நிரபராதியாக நிரூபித்து வெளிவர வேண்டும்.

அதனைச் செய்யாமல், குறுக்குவழியில் செல்லவே மஹிந்த ராஜபக்ச தரப்பினர் முனைகின்றனர்.

பாராளுமன்றத்திலும், வெளியிலும், போராட்டங்களை நடத்தி அழுத்தங்களைக் கொடுத்ததும், லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு பணிப்பாளருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவரைப் பதவி நீக்க கோருவதும், ஆட்சி அதிகாரத்தை முடக்கி வைப்பதுவும், விசாரணையிலிருந்து தப்பிப்பதற்கான குறுக்கு வழி மூலோபாயங்களாகும்.

ஆனால், அது நெடுநாளைக்கு மஹிந்த ராஜபக்ச தரப்பினரைக் காப்பாற்றப் போவதில்லை.

இந்தக் கட்டத்தில் இன்னொரு கேள்வியும் எழுந்திருக்கிறது.

போரின் போது நடந்த மீறல்கள் தொடர்பாக நம்பகமான உள்நாட்டு விசாரணை நடத்துவதாக உறுதியளித்திருக்கிறது அரசாங்கம்.

போருக்குத் தலைமை தாங்கியவர்-வழிநடத்தியவர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவும், இந்த விசாரணையில் தவிர்க்கப்பட முடியாதவர்களாக இருப்பர்.

அவ்வாறானதொரு நிலையில், அவர்களை விசாரிப்பது எந்தளவுக்கு குதிரைக் கொம்பான விடயமாக இருக்கப் போகிறது என்பது இப்போதே சர்வதேச சமூகத்துக்குப் புரிந்திருக்கும்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவைப் போன்று போர்க்குற்ற விசாரணைக் குழு அவரது வீட்டுக்கே சென்று விசாரணை நடத்த முடியாது. அது நம்பகமானதாகவோ நடுநிலையானதாகவோ, வெளிப்படைத் தன்மையானதாகவோ இருக்காது.

அப்போதும் இப்படியொரு நிலை ஏற்பட்டால், சர்வதேச சமூகம் அந்த விசாரணையை ஏற்றுக் கொள்ளுமா என்ற கேள்வியும் இருக்கிறது.

விசாரணைக்கே இந்த நிலை என்றால், மஹிந்த ராஜபக்ச அல்லது கோத்தபாய ராஜபக்ச மீது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் நிலை ஒன்று ஏற்பட்டால், தண்டனையை செயற்படுத்தும் சூழல் ஒன்று இருக்குமா என்றும் தெரியவில்லை. இத்தகைய கேள்விகள் தமிழ் மக்களிடம் மட்டும் இருந்து எழவில்லை. சர்வதேச சமூகத்திடமும் இதே சந்தேகம் எழுந்திருக்கும்.

ராஜபக்ச குடும்பத்தினரை, குற்றச்சாட்டுகள், விசாரணைகள், தண்டனைகளுக்கு அப்பாற்பட்டவர்களாகப் பார்க்கின்ற, போற்றுகின்ற நிலை மாற்றப்படாது போனால், மீண்டும் இலங்கை சர்வதேச அழுத்தங்களுக்குள் சிக்கிக் கொள்ளும் நிலையே ஏற்படும்.

மஹிந்த ராஜபக்சவுக்கோ, கோத்தபாய ராஜபக்சவுக்கோ எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் என்று விடுக்கப்பட்ட எச்சரிக்கையை எவராலும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

இரத்த ஆறு என்பது மிகமோசமாக வன்முறையைத் தூண்டும் செயல். யாருடைய இரத்தம் ஓடப் போகிறது? அவ்வாறு செய்யப் போகிறவர்கள் யார்? இந்தக் கேள்விகள் எல்லாம் கடந்த கால ஆட்சியின் கொடூரத்தையே நினைவுபடுத்துகின்றன.

மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக சட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளுக்கு, அவர் நியாயமான ஒத்துழைப்பைக் கொடுப்பதே, அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களை தொடர்ந்தும் அவரது பக்கம் நிற்க உதவும்.

மாறாக, குற்றச்சாட்டுகளைக் கண்டு ஓடுபவராகவோ, ஒதுங்குபவராகவோ இருந்தால், இன்னும் இன்னும் சந்தேகங்கள்தான் தலைதூக்கும். அது அவரது இரண்டாவது அரசியல் பிரவேசத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால் மஹிந்த ராஜபக்சவின் முன்னைய ஆட்சிக்காலத்தை மக்கள் இன்னமும் மறக்கவில்லை.

-இணையம்-

# மைத்திரி அரசின் 100 நாள் திட்டம்

# தோல்வி

## த எக்னோமிக்ஸ்ட் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**இலங்கை அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டம் தோல்வியை தழுவியுள்ளது என உலகப் புகழ்பெற்ற த எக்னோமிக்ஸ்ட பத்திரிகை செய்தியை வெளியிட்டுள்ளது.**

100 நாட்கள் வேலைத்திட்டம் தோல்வியடைந்தமைக்கான பிரதான காரணம் என்னவெனில் புதிய அரசாங்கத்திற்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது பலத்தை உறுதி செய்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அசம்ந்த போக்குடன் செயற்பட்டு வருவதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்காகவே ஜனாதிபதி அதிக காலங்களை செலவிட்டுள்ளார் என அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட போதிலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு கட்சி ஆதரவாளர்கள் இருப்பதனால் அவருக்கு ஏதாவதொரு இலாபம் அடைவதற்கான வாய்ப்பு கட்சிக்குள் காணப்படுவதாக அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவரை நீக்குமாறு கோரி 113 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்று சபாநாயகரிடம் ஒப்படைத்த சம்பவம் மூலம் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பாகவும் குறித்த பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்திற்குள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தது.

எனினும் தற்போதைய அரசாங்கத்திற்கு உண்மையற்ற குழுவின் வேலைத்திட்டங்களில் தோல்வியை தழுவுவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மாத்திரமே இதுவரை முடிந்துள்ளது என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தான் இதுவரை அரச கட்சியில் அங்கம் வகிக்கின்றேன் என்பதை விட எதிர்க்கட்சியில் அங்கம் வகிப்பதாகவே உணர்கின்றேன் என நாட்டில் தற்போதைய நிலைமை தொடர்பில் குறித்த பத்திரிகைக்கு அரச கட்சி உறுப்பினர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்நிலையினால் வெகு விரைவில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கு செல்ல ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என அப்பத்திரிகை கணிப்புகளை வெளியிட்டுள்ளது. (இ)

## அரசாங்கம் கடவுள்களின் கூட்டமைப்பு கிடையாதாம்

### சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

நல்லாட்சி அரசாங்கம் கடவுளர்களின் கூட்டமைப்பாக கருதப்பட முடியாது என பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் பிழைகளையே செய்யாது என அர்த்தமில்லை என அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் குற்றங்களை செய்திருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குற்றம் செய்வதனால் அரசாங்கம் அவர்களுக்கு அடைக்கலம் வழங்குவதாக அர்த்தப்படாது என அவர் தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறைமையை அறிமுகம் செய்யும் போது அரசியல் கட்சிகள் மிகவும் நிதானத்துடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

போதைப் பொருள் கடத்துவோர், குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு கட்சிகள் வேட்பு மனுக்களை வழங்கக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்கள் எதேச்சதிகார போக்கில் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## 20ம் திருத்தத்திற்கு ஆதரவு அவசியமே



20 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு அவசியம் என எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்ட நிறைவேற்றத்தின் பின்னர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக திருப்தி அடைய முடியாது. சிறந்த ஓர் தேர்தல் முறைமை அவசியமாகின்றது.

19 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதனைப் போன்று 20 ஆம் திருத்தச் சட்டத்தையும் அமுல்படுத்த வேண்டும்.

எந்தவொரு ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படாத காரியத்தை இந்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்.

அதிகார மோகமின்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## பசிலை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலைக்கு அச்சுறுத்தல்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகள் சிலருக்கு தொலைபேசி ஊடாக இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் இது குறித்து பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசஷ்தி லக்மினி அபேநாயக்கவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி 4.25 மற்றும் 4.30 மணிகளில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கைது செய்யப்பட்டு கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பசில் ராஜபக்ஷவை உடனடியாக விடுதலை செய்யுமாறு கடுமையான வார்த்தைகளினால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைபேசி அழைப்புக்கள் பற்றிய விபரங்களை திரட்டி அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொரளை பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### வெற்றிக்கு வேண்டும் நல்ல பண்புகள்

இந்த உலகத்தில் இப்போது மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மனிதர்களின் தொகை குறைந்து கொண்டே போகிறது. இது ஓர் அறிஞரின் கூற்று.

என்ன நண்பர்களே! அதிர்ச்சியாக இருக்கிறதா? ஆனாலும் இது தான் உண்மை. வடிவத்தில் தான் பல பேர் இங்கே மனிதர்களாக இருக்கிறார்கள். மனதால் மனிதர்களாக இவர்கள் இருப்பதில்லை.

ஒரு நல்ல மனிதனை அடையாளம் காட்டுவது அவனிடமுள்ள நல்ல பண்புகள்தான். செல்வத்தை இழந்து விட்டால் கூட மீண்டும் பெற்று விடலாம். ஆனால் பண்பை இழந்து விட்டால் மீண்டும் அதை நிலைப்படுத்துவது மிகவும் சிரமம்.

'நாட்டையும் மக்களையும் சத்தியத்தையும் எவன் ஒருவன் உண்மையாக நேசித்து பணிவுடன் நடக்கிறானோ அவனால் இந்த உலகத்தை ஓர் அசைப்பு அசைத்துவிட முடியும். ஆற்றல்களுக்கெல்லாம் அடிப்படையாய் அமைவது பண்புதான்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

அன்றாட வாழ்க்கையில் ஒழுங்காக உடை உடுத்துவது, ஒழுங்காக நடப்பது, ஒழுங்காகப் பேசுவது, ஒழுங்காக சிந்தனை செய்வது, இப்படி சின்னஞ்சிறு விடயங்களில் கூட ஒருவருடைய பண்பு மறைந்து இருக்கிறது.

**நாம் எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல எப்படி வாழ்கிறோம் என்பதுதான் முக்கியம். மனிதனது வெற்றியிலும் தோல்வியிலும் அவனது வாழ்க்கை முறையும் பண்பும் முக்கிய பங்கு வகிக்கின்றன.**

ஒருநாள் பகல் நேரம் டயோஜினிஸ் என்ற தத்துவ ஞானி ஒரு மெழுகுவர்த்தியை வைத்துக்கொண்டு 'மனிதனைத் தேடுகிறேன்' என்று அலைந்தாராம். மனிதம் நிறைந்த மனிதர்களைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது என்பதே அவரது தேடலுக்கு அர்த்தம்.

எந்தச் சூழ்நிலையிலும் பொறுமையாக பதில் சொல்வது என்பது ஒரு நல்ல பண்பு. அலுவலக கோபத்தை வீட்டிலும், வீட்டு கோபத்தை அலுவலகத்திலும் காட்டிக்கொண்டிருந்தால் நாம் இன்னும் பக்குவம் அடையவில்லை என்று தான் பொருள். கொஞ்சிக் குலாவுகிற வகையில் பேசாவிட்டாலும் இங்கிதமாக இயல்பாக பேசுவதே சிறப்பான பண்பாகக் கருதப்படுகிறது.

பொய், பொறாமை, துஷ்பிரயோகம், திருட்டு எண்ணம், நேரம் தவறுதல் இவை எல்லாம் பண்பு குறைவான விடயங்கள், அவரவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்கத் தெரிந்திருப்பது உங்களைப் பண்பானவர்களாக காட்டும். குறை காணுவதை விட மன்னிப்பது மாண்பான பண்பு. வீட்டிலும் அலுவலகத்திலும் சமுதாயத்திலும் நல்ல பண்புகளைக் கடைப்பிடித்தால் வெற்றி நம்மைத் தேடிவரும். நம்மிடம் நிலைத்து நிற்கும்.

உயிரோடு வாழ்வது மட்டும் வாழ்க்கையல்ல; உயிர்ப்போடும் வாழவேண்டும். அதற்கு நல்ல பண்புகள் வேண்டும்.

எல்லாவற்றிலும் உள்ள நல்லதைப் பாருங்கள்.

நன்றி பண்பாண்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

தீய எண்ணங்களிலிருந்து விலகியிருக்கப் பழகுங்கள்.

நல்லெண்ணங்களுடன் உங்கள் நாளைத் தொடங்குங்கள்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# தமிழக அரசியலில் 8 இற்கு மேற்பட்ட முதலமைச்சர் வேட்பாளர்கள்!

தமிழக தேர்தல் களம் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சூடு பிடித்துள்ளது.

எந்தக் காலகட்டத்திலும் இல்லாத அளவுக்கு பல முதலமைச்சர் வேட்பாளர்கள் 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலை குறி வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வரிசையில் லேட்டஸ்டாக வந்திருப்பவர் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன். மறைந்த மூப்பனாரின் பிள்ளையான இவர் காங்கிரஸிலிருந்து விலகி புதிய கட்சி தொடங்கினார். அவர் தனது முதல் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். அதிக அளவில் உறுப்பினர்களை சேர்க்க இப் போதே அந்தக் கட்சிகள் கச்சை கட்டி நிற்கின்றன. தி.மு.க. சார்பில் உறுப்பினர்கள் சேர்க்கை ஏற்கனவே முடுக்கி விடப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரை 'மிஸ்டு கால்' கொடுத்து இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும் அதே பணியில் இப்போது இறங்கிவிட்டன. எல்லோருமே 'உறுப்பினர்கள் சேர்க்கையில்' அதிக ஆர்வம் காட்டக் காரணம் அனைத்து கட்சி தலைவர்களுக்குமே இருக்கும் முதலமைச்சர் ஆசைதான்.

தி.மு.க.வின் சார்பில் இப்போதைக்கு முதலமைச்சர் வேட்பாளர் கலைஞர் மு.கருணாநிதியா அல்லது மு.க. ஸ்டாலினா என்ற கேள்வி. அ.தி.மு.க.விலோ பெங்களூரில் நடக்கும் மேல்முறையீட்டு வழக்கில் வரும் தீர்ப்பை வைத்து முதலமைச்சர் வேட்பாளர் ஜெயலலிதாவா அல்லது வேறு யாருமா என்பது இன்னொரு கேள்வி.

தே.மு.தி.க.வின் சார்பில் விஜயகாந்த் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்படுகிறார். தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் ஜி.கே. வாசன் முன்னிறுத்தப்படுகிறார். காங்கிரஸ் சார்பில் அனேகமாக முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் முன்னிறுத் தப்படலாம். ம.தி.மு.க.விலோ வைகோ முதலமைச்சர் வேட்பாளராக நிற்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேல் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அன்புமணி ராமதாஸ் முதல்வர் வேட்பாளர் என்று ஏற்கனவே டிக்ளேர் செய்யப்பட்டு விட்டது.

அதை விட நாம் தமிழர் கட்சி நடத்தும் சீமானும் தன்னை முதலமைச்சர் வேட்பாளர் என்று சொல்லிக் கொள்ளத் துவங்கி விட்டார். இதன் அடிப்படையில் பார்த் தால், இப்போதே எட்டு முதலமைச்சர் வேட்பாளர்கள் தமிழக தேர்தல் களத்துக்கு தயாராகி விட்டார்கள்.

பா.ஜ.க.வின் சார்பில் மட்டும் தேர்தல் நேரத்தில் முதல்வர் வேட்பாளரை அறிவிப்போம் என்று சூட்சுமமாக அறிவித்துள்ளார்கள். எட்டுக்கும் மேற்பட்ட முதலமைச்சர் வேட்பாளர்கள் களத்தில் நிற்க தமிழக அரசியல் சூழ்நிலை மிகவும் போட்டி நிறைந்ததாக மாறக்கூடும் என்றே இப்போதைக்குத் தெரிகிறது.

ஏனென்றால், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் வேறு இன்னும் தங்கள் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று அறிவிக்கவில்லை. அவர்களின் உட்கட்சி தேர்தல், உட்கட்சி கொள்கை முடிவு போன்றவற்றிலேயே கடந்த சில மாதங்களாக கவனம் செலுத்தி வருகிறார்கள் கம்யூனிஸ்ட் கட்சிகள்.

இப்படி எட்டு முதலமைச்சர் வேட்பாளர்கள் களத்தில் நின்றாலும் வாக்கு வங்கி அடிப்படையில் பார்த்தால் அந்தப் பதவிக்கு அருகில் இருக்கும் கட்சிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று அ.தி.மு.க. இன்னொன்று தி.மு.க. இந்த இரு கட்சிகள் தவிர மற்ற கட்சிகள் அனைத்துமே 'ஆசை இருக்கிறது. ஆனால், அள்ளிக் கொடுக்க பாத்திரத்தில் ஒன்றுமில்லை' என்ற கதைதான்.

அதேநேரத்தில் இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் தமிழகத்தில் அ.தி.மு.க.வே பலம் வாய்ந்த கட்சி என்ற நிலை இருந்து வந்தது. இப்போது திடீரென்று தினத்தந்தி டி.வி.யில் வெளிவந்துள்ள கருத்துக் கணிப்பில் தி.மு.க.வுக்கு 48 சதவீத மக்கள் ஆதரவு இருக்கிறது என்றும். அ.தி.மு.க.வுக்கு 34 சதவீத ஆதரவுதான் இருக்கிறது என்றும் அரங்கேறி யுள்ளது.









இது அ.தி.மு.க.வின் செல்வாக்கு குறைந்து வருகிறதோ என்ற தோற்றத்தை மக்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறது. இது போன்ற காலகட்டத்தில் மற்ற கட்சிகள் தங்களுக்கு உள்ள முதலமைச்சர் ஆசையை எப்படி நிறை வேற்றிக் கொள்ளப் போகின்றன என்பது கேள்விக்குறிதான். இதனால் அ.தி.மு.க. அல்லது தி.மு.க. தயவின்றி மற்ற கட்சிகளால் தங்கள் முதல்வர் பதவிக் கனவை நனவாக்க முடியாது. அதற்கு இந்த இரு திராவிடக் கட்சிகளும் இப்போதைக்கு இடமளிக்கப் போவதில்லை.

பிறகு எப்படி இந்த மாதிரி முதல்வர் பதவியை முன்னிறுத்தி மற்ற கட்சிகள் பிரசாரத்தில் குதித்து விட்டன. பாட்டாளி மக்கள் கட்சிக்கு எப்படியாவது வன்னியர் வாக்கு வங்கியை தங்கள் பக்கம் முழுமையாக திருப்ப வேண்டும்.





அதனால் அன்புமணி ராமதாஸை முதல்வர் வேட்பாளராக அறிவித்துள்ளது அக்கட்சி. அதே நேரத்தில் மற்ற கட்சிகளுக்கு இப்படியொரு நோக்கம் இல்லை. தே.மு.தி.க.விற்கோ தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் அக்கட்சியின் தயவை எதிர்நோக்கி காத்திருக்கும் சூழ்நிலை எழலாம்.

அது போன்ற நேரத்தில் மூன்றாவது பெரிய கட்சி நான்தான் என்ற நிலைப்பாட்டை எடுக்க இந்த முழக்கம் உதவும் என்று விஜயகாந்த் நினைத்திருக்கலாம்.



தமிழ் மாநில காங்கிரஸ், ம.தி.மு.க. போன்ற கட்சிகளுக்கு தேர்தல் நேரத்தில் தங்களுக்கு வேண்டிய தொகுதிகளை அ.தி.மு.க.வோ அல்லது தி.மு.க.வோ ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது.

அதற்கு வழி அமைக்கும் விதத்தில் நம் வியூகம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து 'முதலமைச்சர் பதவி' என்ற முழக்கத்தைக் கையில் எடுத்துள்ளன. அ.தி. மு.க. வேண்டாம் என்று நினைக்கும் பட்சத்தில் தி.மு.க.வை தவிர்த்து விட்டு மற்ற கட்சிகளை தேர்வு செய்வோம் என்ற எண்ணம் மக்கள் மனதில் இதுவரை எழவில்லை.

சமீபத்தில் வெளிவந்துள்ள ஆன் லைனை சர்வேக்களும் அப்படிப்பட்ட சூழல் இருப்பதாக வெளிப்படுத்தவில்லை. இதுவரை நடைபெற்ற தமிழக தேர்தல்களில் தி.மு.க.வுக்கு அ.தி.மு.க. மாற்று என்றும், அ.தி.மு.க.வுக்கு தி.மு.க. மாற்று என்றும் நிலைமை அப்படியே தொடர்ந்து வருகிறது.

குறிப்பாக சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. தோல்வி அடைந்து கூட அ.தி.மு.க.வுக்கு மோடி தலைமையில் நின்ற கூட்டணி கூட மாற்று என்ற சூழல் வரவில்லை. தி.மு.க.தான் மாற்று என்பது நாடாளுமன்றத் தேர்தலிலும்சரி, அதன்பிறகு நடைபெற்ற திருவரங்கம் இடைத் தேர்தலிலும்சரி தொடருகிறது.

ஆகவே எத்தனை முதலமைச்சர் வேட்பாளர்கள் களத்தில் நின்றாலும் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. சார்பில் யார் முதலமைச்சர் வேட்பாளர் என்பதே தமிழக தேர்தல் களத்தின் முடிவினை தீர்மானிக்கும் சக்திகளாக விளங்கப் போகிறது.

அந்த நிலைமையில் இதுவரை மாற்றமில்லை. இப்போது மத்தியில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க.வின் மத்திய அமைச்சர்கள் எல்லாம் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் தமிழகத்துக்கு படையெடுக்கப் போகிறார்கள்.

'அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் தமிழகத்தின் வளர்ச்சியை கெடுத்து விட்டார்கள்' என்ற பிரசாரத்தை மேற்கொள்ளப் போகிறார்கள். ஏன், பிரதமர் நரேந்திரமோடியே களத்துக்கு வந்து பிரசாரம் செய்யப் போகிறார் என்று பா.ஜ.க.வின் தமிழக தலைவர் தமிழிசை சவுந்திரராஜன் அறிவித்திருக்கிறார்.

அதன் பின்னர்தான் இப்போது ரேஸில இருக்கும் முதலமைச்சர் வேட்பாளர்களில் யாருக்கு வாய்ப்பு இருக்கிறது. முக்கிய மாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வின் முதல்வர் வேட்பாளர்கள் தவிர மற்ற கட்சிகளின் முதல்வர் வேட்பாளர்களுக்கு தமிழகத்தில் ஒரு வாய்ப்பு இருக்கிறதா என்பது தெரியவரும்.

பா.ஜ.க.வின் பிரசாரத்தை எதிர்நோக்கி தி.மு.க.வும் அ.தி.மு.க.வும்கூட பதற்றத்துடன் உன்னிப்பாக கண்காணிப்புடன் இருக்கிறது என்பதே தமிழக அரசியல் நிலவரம்!

-எம்.காசிநாதன்-

# ஐ.எஸ்.தீவிரவாதிகளால் ஐ.நா.அதிகாரி கடத்தல்!

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பணயக்கைதிகளாக பிடித்து பலரது தலையை துண்டித்து கொடூரமாக கொலை செய்து வருகிறார்கள். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் படை வீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் பாதிக்கப்படும் மக்களுக்கு சேவை செய்யும் பணியில் ஐ.நா. ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தநிலையில் தலைநகர் பக்தாத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள தியாலா மாகாணம் பாகியூ பாவில் ஐ.நா.வின் தொடர்பு அதிகாரி ஒருவரை மர்ம நபர்கள் கடத்திச்சென்றுவிட்டனர். தொடர்ந்து பல்வேறு கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இதில் தொடர்பு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா.செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ஐ.நா.அதிகாரி கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டார். அவரை தேடும்பணியில் ஈராக் அரசுடன் இணைந்து செயற்படுகிறோம். கடத்தப்பட்ட அதிகாரியை மீட்டு விடுவோம்என்ற நம்பிக்கை உளளது என்று தெரிவித்துள்ளார். (இ)

கறுப்பின இளைஞனின் மரணத்தால்

# அமெரிக்காவில் நெருக்கடி நிலை

அமெரிக்காவில் மேரிலேண்ட் மாகாணத்தில் உள்ள பால்டிமோர் நகரில், 25 வயது கறுப்பின இளைஞர் பிரெடீ கிரே என்பவர் பொலிஸ் காவலில் பலியானார். அங்கு ஆபிரிக்க அமெரிக்கர்கள் இதுபோன்று பலியாகி வருவது, கறுப்பு இனத்தவரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தில் 6 அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க சட்டத்துறை விசாரணை நடத்தி வருகிறது. இந்த நிலையில், கிரேயின் இறுதிச்சடங்கை தொடர்ந்து,அங்கு பெரும் கலவரம் மூண்டது. போராட்டக்காரர்கள் மதுக்கடைகள், மருந்துக்கடைகள், வணிக வளாகங்களை சூறையாடினர். கட்டடங்களை தீயிட்டுக்கொளுத்தினர். 15 பொலிஸ் அதிகாரிகளை காயப்படுத்தினர்.

அங்கு கவர்னர் லேரி ஹோகன், நெருக்கடி நிலையை பிரகடனம் செய்தார். தீயிடப்பட்ட கட்டிடங்களை தீயணைப்பு படையினர் பல மணி நேரம் போராடி அணைத்தனர். இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)




# நேபாள நிலநடுக்கம் பலி எண்ணிக்கை 5057ஆக உயர்ந்தது

(காத்மண்டு)

**நேபாளத்தை கடந்த சனிக்கிழமை தாக்கிய 7.9 ரிக்டர் அளவிலான மோசமான நிலநடுக்கப் பேரழிவில் பலியானோர் எண்ணிக்கை 5057ஆக உயர்ந்துள்ளது. மேலும் 8000 பேர் படுகாயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் உணவு, தண்ணீர் ஆகியவை கிடைக்காமல் நிவாரண உதவியை எதிர்நோக்கியுள்ளனர்.**

80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான நிலநடுக்கத்தை சந்தித்த நேபாளத்தில் நேற்று முன்தினம் மட்டும் தொடர்ந்து 16 முறை நிலநடுக்கம் உலுககியதில் பல்லாயிரம் வீடுகள் இடிந்து விழுந்து தரைமட்டமாகின.

வரலாற்று சிறப்புமிக்க பல நினைவுச் சின்னங்களை மண்மேடாக்கிய இந்த இயற்கையின் கோரத்தாண்டவத்தில் பழைமையான பல கோயில்களும் சேதமடைந்தன.

ஆயிரக்கணக்கானவர்களுக்கு இடவசதி இல்லாததால் திறந்த வெளியிலும், தற்காலிக கூடாரங்கள் அமைத்தும் மருத்துவ குழுவினர் போர்க்கால அடிப்படையில் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.



மக்கள் அனைவரும் வீடுகளை இழந்து வெட்டவெளியில் உறங்கும் நிலையில், மழை பெய்து அவர்களின் உறக்கத்தையும் கெடுக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் பூகம்பத்தால் படுகாயமடைந்த 8000 பேருக்கு அளிக்கப்பட்டு வரும் மருத்துவ சிகிச்சையும் சவாலானதாக உள்ளது.

இந்நிலையில் பலியான வரகளின் எண்ணிக்கை 10 ஆயிரமாக உயரும் என அந்நாட்டு பிரதமர் சுஷீல் கொய்ராலா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நேபாளத்தில் மலையேறச் சென்ற 250பேரை இன்னும் காணவில்லை

நேபாள தலைநகர் காத்மண்டுவின் வடக்கு பகுதியில் ரசுவா என்னும் மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் உள்ள கோடத பேலா என்ற கிராமம் மலையேற்றத்துக்கு பிரசித்தி பெற்றது. இங்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வந்து செல்வது வழக்கம்.

கடந்த 25ஆம்தேதி நேபாளத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட போது இங்கு 250க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் மலையேற்றத்தில் ஈடுபட்டு இருந்தனர். அதன் பிறகு 3 நாட்களுக்கு மேலாகியும் இவர்களைப் பற்றிய தகவல் எதுவும் இது வரை தெரிய வரவில்லை. எனவே, நிலநடுக்க த்தின்போது இங்குஅதிக அளவில்பனிப்பாறைகள சரிந்து விழுந்ததில் இவர்கள் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.



இதுபற்றி ரசுவா மாவட்ட அதிகாரிஉதய் பட்டராய்கூறும்போது, "மலையேறச்சென்ற சுற்றுலா வாசிகள் 250 பேரை காணவில்லை. இவர்களை மீட்கும் முயற்சியில் தொடர ந்து ஈடுபட்டு வருகிறோம். எனி னும், மோசமான வானிலை மற்றும் கனமழை காரணமாக தேடுதல் முயற்சி மந்தகதியில் நடந்து வருகிறது" என்று தெரிவித்தார். (இ)

# பாகிஸ்தானிலும் திடீர் நிலநடுக்கம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியான கைபர் பக்தூன்கவா மாகாணத்தில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5.5 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதி பொது மக்கள் பெரும் அச்சமடைந்து வெட்ட வெளிப் பகுதியில் தஞ்சமடைந்தனர். எனினும் உயிரிழப்போ, பொருட் சேதமோ ஏற்பட வில்லை.

நேபாளத்தில் 7.9 என்ற அளவில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 5ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் பீஹார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் நிலநடுக்கம் பலரை பலி வாங்கியுள்ளது. சீனாவையும் நில நடுக்கம் விட்டு வைக்கவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தானில் நில நடுக்கம் ஏற்பட்டு அந்நாட்டு மக்களை பீதியில் உறைய வைத்துள்ளது. இந்துகுஷ் மலைப் பகுதியில் தஜிகிஸ்தான் எல்லையில் பூமிக்கு அடியில் 144 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதி வரை நிலநடுக்கம் உணரப்பட்டது. இதற்கு முன்பு 2013 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் 7.7 என்ற அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது.

இதில் 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந் தனர். அதற்கு முன்பு 2005ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 73 ஆயிரம் பேர் பலியாயினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகளிடமிருந்து 300 சிறுமிகள் மற்றும் பெண்களை மீட்டது இராணுவம்

(மைதுகுரி)

போகோஹராம் தீவிரவாதிகளிடமிருந்து 300 சிறுமிகள் மற்றும் பெண்களை நைஜீரிய இராணுவம் மீட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள சாம்பிசா வனப் பகுதியில் போகோஹராம் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையின் போது 3 முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 300 சிறுமிகள் மற்றும் பெண்களை இராணுவம் மீட்டுள்ளது. இவர்களில் 200 சிறுமிகளும் 93 பெண்களும் அடங்குவார்கள்.

மீட்கப்பட்டவர்களில் யாரும், கடந்த ஏப்ரலில் சிபோக் என்ற நகரின் கிறிஸ்தவ உண்டு உறைவிட பள்ளியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 219 சிறுமியர் இல்லை என தெரியவந்துள்ளது. எனவே கடத்தி செல்லப்பட்ட சிறுமிகளின் நிலை பற்றி தெரியவில்லை.

அவர்கள் இன்னும் பயங்கரவாதிகள் பிடியில் தான் உள்ளதாக கருதப்படுகிறது. (இ)

# இலங்கைத் தமிழர் உட்பட 8பேருக்கு மரணதண்டனை

போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட அவுஸ்திரேலியர்களான, மயூரன் சுகுமார் (ஈழத் தமிழர்) மற்றும் அன்ரூ சான் ஆகியோருக்கும் ஏனைய அறுவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

12 பொலிஸார் சூழ்ந்திருக்க இவர்களுக்கான தண்டனை நேற்று அதிகாலை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மத்திய ஜாவா பிராந்தியத்திலுள்ள நுசக்கம்பங்கன் சிறைச்சாலை தீவில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததன் மூலம் எட்டு பேரினதும் மரணதண்டனைகளை நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா. உயரதிகாரிகள், அவுஸ். அதிகாரிகள், பிலிப்பைன்ஸ் அதிகாரிகள், உறவினர்கள், கருணை உள்ளம் கொண்ட மக்கள் என சர்வ தேச அளவில் அனைவரும் இந்தோனேஷிய அரசிடம் தண்டனையை இரத்து செய்யுமாறு கேட்டபோதிலும், தண்டனையை நிறைவேற்றியுள்ளது இந்தோனேஷிய அரசாங்கம்.

எனினும் இவர்களுடன் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒன்பதாவது நபரான பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த மேரி ஜேன் வெலொசோ என்னும் பெண்ணின் மரணதண்டனை கடைசி நேரத்தில் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

போதைமருந்தை கடத்துவதற்கான கருவியாக மேரி ஜேன் வெலொசோவை தான் பணியில் அமர்த்தியதாக கூறி பெண் ஒருவர் பிலிப்பைன்ஸ் நாட்டின் பொலிஸ் நிலையத்தில் தன்னைத்தானே ஒப்படைத்துக் கொண்டதைத் தொடர்ந்து, மேரிக்கான மரண தண்டனை நிறைவேற்றம் தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது.

எனினும் பிலிப்பைன்ஸ் அரசு, இந்தோனேசிய Attorney-General-க்கு மரண தண்டனையை தடை செய்யுமாறு ஒரு அவசர கடிதத்தை அனுப்பியமையை அடுத்தே இப்பெண்ணின் தண்டனை இறுதி நேரத்தில் தள்ளிப்போயிருக்கின்றது.

ஏனைய எண்மரும், அவுஸ்திரேலியக் குடியுரிமை பெற்ற இலங்கை, இந்தோனேஷியா, மற்றும் நைஜீரியா, பிறேசில் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட முன்னர், மயூரனும், சானும் இறுதிக்கோரிக்கையை விடுத்தனர்.

தமது உடல்கள் அவுஸ்திரேலியாவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு இறுதிக் கிரியைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

இவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற இந்தோனேஷிய அரசாங்கம் இணங்கியதாக இந்தோனேஷிய சட்டமா அதிபர் அலுவலகத்தின் பேச்சாளர் ரோனி ஸ்பொன்டானா தெரிவித்தார்.

குறித்த எட்டுப் பேரின் மரண தண்டனையை தடுத்து நிறுத்துமாறு உலக நாடுகளால் கடும் அழுத்தம் கொடுக்கப்பட்ட நிலையிலும், அதனை கருத்திற்கொள்ளாத இந்தோனேஷிய அரசாங்கம் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது குடிமக்களான மயூரன் மற்றும் சான் ஆகியோர் மரண தண்டனையில் கொல்லப்பட்டால் அதற்கான எதிர்விளைவுகளுக்கு இந்தோனேஷியா முகம் கொடுக்க வேண்டி வரும் என்று அவுஸ்திரேலியா எச்சரித்திருந்த போதிலும் குற்றவாளிகளை தண்டித்து தடுப்பதற்காகவே இந்த தண்டனை நிறைவேற்றப்படுவதாக இந்தோனேஷியா தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

1. மயூரன் சுகுமாரன் : 34 வயதுடைய அவுஸ்திரேலியப் பிரஜை. இவர் இலங்கை வம்சாவளித் தமிழர். சிட்னியில் பெற்றோருடன் வசித்து வந்தவர். 2005 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார். சிறைச்சாலையில் வரையும் திறமைகளை வளர்த்துக் கொண்ட மயூரனின் ஓவியங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தன.

2. அன்ட்ரூ சான் 31 வயதுடைய அவுஸ்திரேலியப் பிரஜை. சீன வம்சாவளியைச் சேர்ந்தவர். போதைப்பொருள் வைத்திருக்காவிட்டாலும், அதனைக் கடத்த முற்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்காக மயூரனுடன் கைது செய்யப்பட்டார்.

3. மேரி ஜேன் வெலோசோ: 30 வயதுடைய பிலிப்பைன்ஸ் பெண்மணி. 2010ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

4. மார்ட்டின் அன்டர்சன்: 50 வயதான நைஜீரியப் பிரஜை. போலி கடவுச்சீட்டில் இந்தோனேசியா சென்றவர். 2004ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

5. ரஹீம் சலாமி: 50 வயதானவர். இவரும் நைஜீரியாவைச் சேர்ந்தவர். பாங்கொக்கில் நிர்க்கதியாக வாழ்ந்தவர்.

6. சில்வெஸ்டர் வொலிசே: 47 வயதானவர். நைஜீரியப் பிரஜை. 2002 இல் கைதாகியிருந்தார்.

7. ஒக்வூடிலி ஒயடான்ஸே: இவருக்கு 41 வயதான நைஜீரியப் பிரஜை. தாம் வேலை செய்த ஆடை தயாரிப்பகம் மூடப்பட்டதை அடுத்து போதைப்பொருள் கடத்தல் காசு தரும் என நம்பியவர். 2002 இல் கைது செய்யப்பட்டிருந்தார்.

8. ரொட்ரிகோ குலார்தே: பிறேசில் நாட்டவர். செல்வம் கொழிக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர். 2004 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

9. செய்னல் அபிதீன்: இவர் இந்தோனேஷியர். 50 வயது. 2001 இல் கைதானவர். தம்மீதான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து நிராகரித்து வருபவர். உண்மையான சூத்திரதாரிகள் தண்டனை அனுபவித்து விட்டு விடுதலை பெற்றுள்ளதாக சாடுகிறார்.

10. செர்கி அட்லூயி பிரான்ஸைச் சேர்ந்தவர். போதையூட்டும் வில்லைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொழிற்சாலையில் வேலை செய்தபோது கைது செய்யப்பட்டிருந்தார். தாம் வெல்டிங் பணியாளராக வேலை செய்ததாகவும் தொழிற்சாலையின் சட்டவிரோத செயற்பாடுகள் பற்றி தாம் அறிந்திருக்கவில்லை எனவும் இவர் கூறுகிறார். செர்கியும் மரணதண்டனை நிச்சயிக்கப்பட்ட கைதியாவார்.

மேன்முறையீட்டு மனுவிலுள்ள சிக்கல் காரணமாக தண்டனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ)

# மரணதண்டனையை நிறைவேற்றியது மனிதவுரிமையை மீறும் செயலாகும்!

## சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு நேற்று நிறைவேற்றப்பட்ட மரணதண்டனைக்கு பதிலாக மாற்று வழியில் தண்டனையை வழங்கி இருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக காட்டியுள்ள அதேவேளை மரண தண்டனையை நிறைவேற்றியது இந்தோனேசியாவின் மனித உரிமை மீறல் செயலாகும் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.**

தென்கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் இயக்குநர் Rupert Abbott மேலும் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

சர்வதேச அளவில் இந்தோனேசிய அரசாங்கத்துக்கு இவ் மரணதண்டனையை இரத்துச் செய்யுமாறு கேட்டபோதிலும் இந்தோனேசிய அரசு குறிக்கப்பட்ட நாளில் இக் குற்றவாளிகளுக்கான தண்டனையை வழங்குவோம் என உறுதியாக தெரிவித்திருந்தது.

இவ்வாறு இந்தோனேசிய அரசு தனது உறுதியில் இருந்து சற்றும் தளராது தண்டனையை நிறைவேற்றியமை என்பது மனித உரிமை மீறல செயலே என தெரிவித்திருந்தார்.

போதைப்பொருள் கடத்தல் என்பது தண்டனைக்குரிய குற்றமாக இருப்பினும் அதற்கான தண்டனை மரண தண்டனை என்பது கொடூரமான தண்டனையே. அக் குற்றத்திற்கான தண்டனை வழங்குவதற்கு மரணதண்டனையை விடுத்து வேறு வழியில் அக்குற்றவாளிகளை தண்டித்திருக்கலாம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

இக்குற்றவாளிகள் சிறைவாசம் இருந்தபோதில் இவர்களுக்கென வாதாடிய சட்டத்தரணிகள் தெரிவித்த கருத்துக்களை இந்தோனேசிய அரசு செவிமடுக்கத் தயார் நிலையில் இல்லாது இவர்களுக்கான தண்டனையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தது.

மேலும் இக்குற்றவாளிகளுள் ஒருவரான நைஜீரியாவைச் சேர்ந்த றொட்ரிகோ குலார்தே என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்த போதிலும் அவருக்கான மரண தண்டனையை விதித்தமை இந்தோனேசிய அரசாங்கத்தின் மனித உரிமை மீறல் செயல் என Rupert Abbott மேலும் தெரிவித்தார். (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சுப்பிரமணியம் செந்தில்நாதன்

(ஓய்வு பெற்ற அதிபர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செந்தில் நாதன் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கந்தையா பரமநாதன்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா பரமநாதன் கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முருகையா கிருபாகரன்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வரணி கரம்பைக் குறிச்சி, கைதடி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா கிருபாகரன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நடராஜா லோகேந்திரன்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா லோகேந்திரன் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் 11மணிவரை St John's Dixie Cemetery & Crematorium,737 Dundas St E,Mississauga,ON L4Y 2B5,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி உருத்திரசிங்கம் சரஸ்வதி

காரைநகர், களபூமி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது 16/24, 8ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி, வேட்டாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரசிங்கம் சரஸ்வதி கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 8மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தச்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தாமோதரம்பிள்ளை லோகநாதன்

அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு விசுவமடு, கிளிநொச்சி புளியம்பொக்கணை, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லோகநாதன் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் மு.ப11மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham, ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### பொன்னம்பலம் சுகதாசன்

(முன்னாள் தபால் உப அதிபர்)

கிளிநொச்சி பூநகரி சித்தன்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுகதாசன் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப10.30 மணி தொடக்கம் பி.ப12.30மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham, ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### அகிலன் தர்மலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வவுனியா செட்டிகுளம் கனடா, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அகிலன் தர்மலிங்கம் கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை Brackley Road, Cemetary, Brackley Road, Towcester, Noethampton NN12 6DH, United Kingdom என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.

# உபியில் சூறாவளி 36பேர் உயிரிழப்பு



உத்தரப்பிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் பெய்த கன மழை மற்றும் சூறாவளி காற்றினால் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் சிக்கி 36 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உத்தரப்பிரதேசி மாநிலம் ரேபரேலி, அமேதி தொகுதிகளில் நேற்று முன்தினம் பலத்த சூறாவளி காற்று வீசியது.

இதில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. கூரை வீடுகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.


மின்னல் தாக்கியதிலும், வீடு இடிந்து விழுந்ததிலும் 36 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (இ)

# தமிழக மீனவர்கள் கடத்தல்காரர்களா?

## வைகோ கடும் கண்டனம்

(சென்னை)

**தமிழக மீனவர்களை கடத்தல்காரர்கள், கிரிமினல்கள் என்று கூறி மத்திய அரசு சார்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.**



தமிழக மீனவர்களை சர்வதேச கடத்தல்காரர்களைப் போல சித்தரித்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் மத்திய அரசு மனு தாக்கல் செய்துள்ளதற்கு மறுமலர்ச்சி தி.மு.க.சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கடலில் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு இந்திய அரசின் கடலோர காவற்படை பாதுகாப்பு அளிக்க வேண்டும். சிங்களக் கடற்படை நமது கடல் எல்லைக்குள் நுழைந்து இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும், துப்பாக்கிச் சூடு நடத்துவதையும், மீன்பிடி கருவிகளை பறிமுதல் செய்யும் அக்கிரமத்தையும் தடுக்க வேண்டும்" என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் சட்டத்தரணி ஒருவர் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், "மீனவர்களுக்கு இந்திய கடல் எல்லையில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும்" என்று உத்தரவிட்டது.

இந்த உத்தரவை செயற்படுத்த முன்வராத மத்திய அரசு அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு ஏப்ரல் 27 அன்று விசாரணைக்கு வந்தபோது, "இந்தியக் கடல் எல்லையில் மீன் வளம் குறைந்ததால், நமது மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பிறகு, நமது மீனவர்கள் தங்கம், போதைப் பொருட்கள் கடத்துகின்றனர். தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்துகின்றனர். இலங்கை மீனவர்களின் மீன்பிடி கருவிகளை தமிழக மீனவர்கள் சேதப்படுத்துகின்றனர். இந்திய மீனவர்களின் சட்ட விரோத செயல்களால் தான், இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளது. சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி போதைப் பொருள் கடத்தல் போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டதற்காக 2014 ஜனவரி முதல் தற்போதுவரை இந்திய மீனவர்களின் 135 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன்,

937 மீனவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலங்கைக் கடல் எல்லையில் அத்துமீறலில் ஈடுபட்ட படகுகளின் பதிவெண்களை இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இந்தியக் கடல் எல்லையில் மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கியதாக இதுவரை கடலோர காவற்படைக்கு எவ்வித புகாரும் வரவில்லை. இலங்கைக் கடற்படையினர் இந்திய எல்லைக்குள் வந்து மீனவர்களைத் தாக்குகின்றனர் என்பது தவறானது" என்று இந்தியக் கடலோர காவற்படையின் துணை தலைமை இயக்குநர் சார்பில், மத்திய அரசின் சட்டத்தரணி பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

மத்திய அரசு சார்பில் மேற்கண்டவாறு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனு, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருக்கிறது. "தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்தால் சுட்டுத் தள்ளுவோம்" என்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதற்கும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தமிழக மீனவர்களைக் குற்றம் சாட்டி மத்திய அரசு தற்போது மனு தாக்கல் செய்துள்ளதற்கும் எந்த வேறுபாடும் இல்லை. இலங்கைக் கடற்படையினர் இந்திய எல்லைக்குள் நுழைந்து நமது மீனவர்களை சுடுவதும், படகுகள் மற்றும் பிற கருவிகளை பறிமுதல் செய்வதும் தொடர் நிகழ்வுகளாகி விட்டது.

இலங்கைக் கடற்படையினரின் அட்டூழியத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, தமிழக மீனவர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கத் தவறிய மோடி அரசு, இலங்கை அரசுக்கு ஆதரவாக, தமிழக மீனவர்களைக் "கிரிமினல்கள்" என்று கருத்துக் கூறுவது மன்னிக்க முடியாத செயலாகும்.

மத்திய அரசின் இந்த நிலைப்பாட்டுக்குக் கண்டனம் தெரிவிப்பதுடன், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தாக்கல் செய்துள்ள பதில் மனுவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 33 மணி நேரத்திற்குப் பின் உயிருடன் மீட்கப்பட்ட பெண்

நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு 33 மணி நேரம் ஆன நிலையில், பெண் ஒருவரை இந்திய பேரிடர் மீட்பு படை வீரர்கள் உயிருடன் மீட்டுள்ளனர்.

அந்நாட்டில் கடந்த சனிக்கிழமையன்று நிகழ்ந்த 7.9 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கத்தால், நாட்டின் பல நகரங்கள் உருக்குலைந்தன. இதில் தலைநகர் காத்மண்டு அருகே உள்ள பசுந்தரா பகுதியில் ஐந்து அடுக்குமாடி கட்டடம் ஒன்றும் இடிந்து விழுந்தது. அதில் சிக்கிய சுனிதா சிதௌலா என்ற பெண்ணை இந்திய பேரிடர் மீட்பு படை வீரர்கள் உயிருடன் மீட்டனர். இது குறித்து மீட்பு பணியில் ஈடுபட்ட இந்திய வீரர் குலிஷ் ஆனந்த் கூறியதாவது,

இரண்டு தடுப்புகளுக்கு இடையே பெண் ஒருவர் சிக்கியிருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து நாங்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டு இடிபாடுகளை அகற்றினோம். சில மணி நேரத்திற்கு பின் அப்பெண் சிக்கிய தடுப்புகளை நெருங்கினோம். அப்போது அதில் இடைவெளி இருப்பது தெரிந்தது. இதனால் அவர் உயிருடன் இருப்பார் என்று நம்பியவாறு தடுப்புகளை அகற்றினோம். அப்போது நாங்கள் நினைத்தவாறே அவர் உயிருடன் இருப்பதை கண்டு மகிழ்ச்சியடைந்தோம்.

எனினும் மயக்க நிலையில் இருந்ததால், அவருக்கு தேவையான உயிர் காக்கும் மருந்துகளை வழங்கினோம். பின்னர் அவர் சுய நினைவடைந்தவுடன், அவரை வெளியே அனுப்பி வைத்தோம் என்றார். நிலக்கடுக்கம் ஏற்பட்டு ஏறத்தாழ 33 மணி நேரத்திற்கு பின் சிதௌலா உயிருடன் மீட்கப்பட்டது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

தான் உயிருடன் மீட்கப்பட்டது குறித்து, சிதௌலா கூறுகையில், நான் புது உலகத்துக்குள் நுழைந்திருப்பதாக உணர்கிறேன் என்றார். தற்போது நிலநடுக்கத்தில் உயிர் தப்பிய அப்பெண்ணின் கணவர் மற்றும் அவரது இரண்டு மகன்களுடன் அவர் சேர்த்து வைக்கப்பட்டுள்ளார். (இ)

# விபத்தில் சிக்கிய ஐவர் உயிரிழப்பு

(திருவண்ணாமலை)

திருவண்ணாமலை அருகே நேற்று அரசு பேருந்து மோதியதில் கடையில் நின்றிருந்த 5 பேர் உயிரிழந்தனர். தென் மாத்தூரில் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து தேநீர் கடைக்குள் புகுந்தது. மதுரை-திருவண்ணாமலை அரசு பேருந்து மோதியதில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கால் முறிவு ஏற்பட்ட 3 பேரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஓட்டுநர் தூக்க கலக்கத்தில் இருந்ததால் விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல் தெரிவிக்கின்றன. விபத்து காரணமாக திருவண்ணாமலையில் போக்குவரத்து சிறிதுநேரம் பாதிக்கப்பட்டது. (இ)

பாரதச் செய்தி

## நேபாளத்திற்கு செல்லுமாறு

# மத்திய அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி உத்தரவு

நேபாளத்தில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லுமாறு 4 மத்திய அமைச்சர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

இந்திய - நேபாள எல்லைப் பகுதிக்கு மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மத்திய அமைச்சர்கள் அனந்தகுமார், ராதா மோகன் சிங், ஜே.பி.நட்டா ஆகியோர் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மற்றும் அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ள பீஹாருக்கு செல்வார்கள். பீஹாரில் சேதாரங்களை மதிப்பிடும் இவர்கள், மாநில முதலமைச்சர் நிதீஷ் குமாரை சந்தித்து பேசுவர். பின்னர் பிரதமரிடம் அறிக்கை அளிப்பார்கள்.

இந்த தகவலை பாஜக எம்.பி.க்கள் கூட்டத்தில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் வெங்கய்யா நாயுடு தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் நிதியமைச்சர் அருண் ஜேட்லி, கட்சியின் மூத்த தலைவர் எல்.கே அத்வானி உள்ளிட்டோர் பங்கேற்றனர். பிரதமர் நரேந்திர மோடியால் இக் கூட்டத்தில் பங்கேற்க இயலவில்லை.

மத்திய அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி செய்தியாளர்களிடம் கூறும்போது, "தர்மேந்திர பிரதான் பீஹாரில் நேபாள எல்லைப் பகுதியில் இருந்துகொண்டு, நேபாளத்தில் இருந்து இந்தியர்களை மீட்கும் பணிகளை மேற்பார்வையிட்டு வருகிறார். மற்ற 3 அமைச்சர்களும் பீஹார் செல்வார்கள்.

நேபாளத்தில் நிலநடுக்க நிவாரணப் பணிகளுக்காக பாஜகவின் அனைத்து எம்.பிக்களும் தங்கள் ஒருமாத ஊதியத்தை அளித்துள்ளனர்" என்றார். நேபாளம் மற்றும் இந்தியாவில் நிலநடுக்கத்தால் இறந்தவர்களுக்கு பாஜக எம்.பி.க்கள் கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் விரைவாக செயற்பட்ட மத்திய அரசுக்கும் பிரதமருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

எம்.பி.க்கள் கூட்டத்தில் நிதியமைச்சர் அருண் ஜேட்லி பேசும்போது, "சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு மசோதா குறித்து அனைத்து மாநில அரசுகளுடன் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா விரைவில் மக்களவையிலும் பின்னர் மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்படும்.

நிலம் கையகப்படுத்தும் மசோதா தொடர்பாக மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் செய்யும் பிரசாரம் மழுங்கிவிட்டது. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலனை மத்திய அரசு பாதுகாக்கும்.

நிலம் கையகப்படுத்தும் மசோதா தொடர்பாக அரசுக்கு எதிரான பிரசாரத்தை மத்திய அரசு அனுமதிக்காது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விவசாயிகளின் நிலையை அறிய ராகுல் காந்தி ரயிலில் சென்றார்

பஞ்சாப் மாநில விவசாயிகளின் நிலையை அறிந்து கொள்ள காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி நேற்று முன்தினம் அந்த மாநிலத்துக்கு ரயிலில் சென்றுள்ளார்.

நாட்டுக்கு உணவு அளிக்கும் விவசாயிகளின் நிலைகள் பாதிக்கப்படுகின்றன. இதை எதிர்த்து காங்கிரஸ் போராடும். இப்போது பஞ்சாப் மாநில விவசாயிகளின் நிலையை அறிந்து கொள்வதற்காக அந்த மாநிலத்துக்குச் செல்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

பஞ்சாப் மாநில காங்கிரஸ் பொறுப்பாளர்கள் ஜோதிராதித்ய சிந்தியா, ஷகீல் அகமது ஆகியோரும் ராகுலுடன் ரயிலில் பஞ்சாப் சென்றுள்ளனர். (இ)

# இறை தியான குணமாக்கல் ஆராதனை நிகழ்வு யாழில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரால் நடத்தப்படவிருக்கின்ற இறைதியான குணமாக்கல் ஆராதனைகள் பின்வரும் இடங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.


மே முதலாம் திகதி காலை 9மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்.இறை தியான இல்லத்திலும் மாலை 5மணிமுதல் இரவு 8மணி வரை செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய முன்றலிலும்

மே 2 சனிக்கிழமை காலை 9மணி முதல் 12மணி வரை திருமண தம்பதியினருக்கு யாழ்.இறைதியான இல்லத்திலும் மாலை 5மணிமுதல் இரவு 8மணி வரை இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றலிலும்

மே 3 ஞாயிறு காலை 9 மணிமுதல் 12 மணிவரை நாரந்தனை புனிதர் பேதுரு பாவிலு ஆலயத்திலும் மாலை 5.30 மணி முதல் இரவு 8மணி வரை யாழ்.குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் இடம்பெறும்.(இ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 04 1934



உதிர்வு 31 03 2015

### அமரர் பொன்னையா பிரான்சிஸ் இராஜசிங்கம்

எங்கள் இதயத்தின் ஒளிவிளக்கே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சென்ற பெருந்தகையே
எங்களை ஏற்றமுறவைத்த பண்பாளனே
பிரிவுத்துயரில் எம்மை விட்டுச்சென்றீரே-இருப்பினும்
இறைவனின் திட்டம் அதுவெனில்
நித்திய வான்வீட்டில் நிம்மதியாக உறங்க
நித்தமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்-தந்தையே!

(224)

51, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## நேபாள நில நடுக்கத்தால் 50,000 கர்ப்பிணிகள் பாதிப்பு

நேபாள நிலநடுக்கத்தால் 50000 கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நடவடிக்கைக்களுக்கான நிதியம் கவலை தெரிவித்துள்ளது. நேபாள நிலநடுக்கத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் பலியாகியிருக்க கூடும் என அந்நாட்டின் பிரதமர் சுஷில் கொய்ராலா கருத்து வெளியிட்டுள்ள நிலையில் நிலநடுக்கத்தால் 50 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என செய்தி வெளியாகி கவலையை ஏற படுத்தியுள்ளது. (இ)



## இணுவில் திருப்பதி அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்
## வசந்தோற்சவ பெருவிழா

இலங்கையில் முதன்முதலாக வசந்தோற்சவ பெருவிழா தொடர்ந்து நான்கு நாட்கள் வெகுசிறப்பாக நடைபெற இருக்கின்றது. நாட்டு மக்களின் நலன் கருதியும் சீரான காலநிலை வேண்டியும் ஸ்ரீமதி நாராயணனை பிரார்த்தனை செய்யும் பொருட்டு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**01.05.2015 வெள்ளிக்கிழமை**
யாகசாலை, கும்பபிரவேசம், காலையும் மாலையும் விசேட பூசை உபசாரம் தொடர்ந்து மூலிகை அபிஷேகம்

**02.05.2015 சனிக்கிழமை**
யாகசாலையில் காலையும் மாலையும் விசேட பூசை உபசாரம் தொடர்ந்து மூலிகை அபிஷேகம்

**03.05.2015 ஞாயிற்றுக்கிழமை**
காலை 7மணி முதல் 81 கலச அபிஷேகம்,
மாலை யாகசாலையில் பூர்ணாகுதி கும்பவீதியுலா,
கும்ப புரோக்சனம் சாற்றும் முறை ஆசீர்வாதம்

**04.05.2015 திங்கட்கிழமை**
மாலை 4.00 மணிமுதல் லக்ஸ்மி நாராயணர் திருக்கல்யாணம்

தினமும் மாலை 7.00 மணிக்கு சங்கீத, பரதநாட்டிய, இசை ஆராதனைகள் நடைபெறும்.

உபயகாரர்

(227)

விளம்பர அனுசரணை
சக்திவேல் ஹாட்வெயார்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில், இணுவில்
கட்டட உதிரிப்பாக விற்பனையாளர்

ஆதீனகர்த்தா

## இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடாத்தும்
## இயல் இசை நாடக விழா- 2015

இடம்:-இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம்
காலம்:- 30.04.2015-04.05.2015 நேரம்:- பி.ப. 4.00 மணி

**30.04.2015 முதலாம் நாள்**

தலைவர்
செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் (பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

பிரதம விருந்தினர்
திரு.பா.செந்தில்நந்தனன் (பிரதேச செயலர், நல்லூர்)

நாச்சிமார் கோவிலடி " இராஜேஸ்வரி" குழுவினர் வழங்கும்
மங்கல இசை

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம் | திருமதி புஸ்பராணி |
| திருமதி சோபனா பாலகிருஸ்ணன் | திருமதி செல்வநாயகம் |

மங்கல விளக்கேற்றல்
திருமதி நீலலோஜினி தர்மகுலசிங்கம் (தலைவர், றோட்டறிக்ட் கிளப், ஆணையாளர், பெண்கள் சாரணியம் பணிப்பாளர், கோல்டின் ஈகிள் பிறைவேட் லிமிட்டெட்)
திரு.இ.கிருஷ்ணமோகன் (பணிப்பாளர்-ரட்ணம் என்ஜினியரிங்)
திரு.க.சோமசேகரன் (மகாராணி றெக்ஸ்ரைல்ஸ்)

தேவாரம்:- அ.ஆரபி, இ.தாரணி,ஸ்.தேவந்தி, க.சங்கவி
(சாரங்கம் இசை மன்ற மாணவிகள்)

ஆசியுரை:- செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(தலைவர், துர்க்கை அம்மன் தேவஸ்தானம்- தெல்லிப்பழை)

வாழ்த்துரை:- திரு.அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)

"காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்" வழங்கும இசைவிருந்து
பாட்டு: செல்வி லதாங்கி ராமகிருஷ்ணன் வயலின்: திரு.கி.பத்மநாதன்
மிருதங்கம்:நல்லை G.கண்ணதாஸ்

வேணுகானம்
புல்லாங்குழல்:திரு.சிவகுமாரன் கஜவதனன் வயலின்: திரு.கி.பத்மநாதன்
மிருதங்கம்:திரு.சதா வேல்மாறன் முகர்சிங்:திரு.க.நந்தகுமார்

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மாணவிகள் வழங்கும்
நாட்டியாஞ்சலி
நாட்டுவாங்கம்:ஸ்ரீமதி. சுதர்ஷினி ஹரன்சன்
பாட்டு: திரு.தவநாதன் றொபெட் மிருதங்கம்: திரு.S. துரைராஜா

சொல்லாடுகளம்
இன்றைய தமிழ் சினிமாவின் இரசனை மட்டம் ஏற்புடையதா?

நெறிப்படுத்துநர்
திரு.இ.சர்வேஸ்வரா (உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)

கருத்துரைப்போர்
திரு.வே.சிவராஜா (சமூகசேவை உத்தியோகத்தர்)
திரு.ந.ஐங்கரன் (முகாமைத்துவ உதவியாளர்)
திரு.சி.சஜீவன் (மக்கள் வங்கி உத்தியோகத்தர்)
திரு.J.P.A. ரஞ்சித்குமார் (சட்டவாளர்)
திரு.ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ (பல்கலைக்கழக மாணவன்)
திரு. ஜி.சஜீவன் (பல்கலைக்கழக மாணவன்)

கலைஞர்கள் கௌரவிப்பு
பிரதமர் விருந்தினர் உரை
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி வழங்கும்
ஸ்ரீமதி.பத்மினி, செல்வேந்திரகுமார், செல்வி.ரஜித்தா சின்னத்துரை, திரு.தவநாதன் றொபேட், நல்லை G.கண்ணதாஸ், திரு.செல்வரட்ணம் ஆகியோரின் பங்களிப்புடன்
நெறியாள்கை, புலவர் முத்துராசரட்ணம்

" இலங்கை வேந்தன்" இசை நடன நாடகம்
நன்றியுரை

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-848)

63, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

அனுசரணை
மாருதி ரேடிங் சென்ரர்
16A.ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
கஜி வீடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இலங்கைவேந்தன்
கலைக்கல்லூரியினர்
அனுமதி இலவசம்

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK-IN INTERVIEW

Walk in interview for appointments to the following posts will be held at the Board Room of this University.

Candidates who have the required qualifications are invited for a walk in Interview, with self prepared applications for the following posts date and time indicated against the post.

**UNIT OF SIDDHA MEDICINE**

11.05.2015 at 2.30p.m.
Post of Temporary Lecturer/ Temporary Demonstractor in Siddha Medicine

**FACULTY OF SCIENCE**

12.05.2015 at 9.30 a.m.
Post of Temporary Lecturer/ Temporary Instructor in Physics
Post of Temporary Lecturer/ Temporary Instructor in Mathematics/ Statistics/ Computer Science
Post Temporary Instructor in Computing
14.05.2015 at 9.30 a.m
Post of Temporary Lecturer/ Temporary Demonstractor in Botany/Zoology/ Fisheries/Chemistry

Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstractor/Instructor

| POST | SALARY SCALE |
| --- | --- |
| Temporary Lecturer | Rs.26,020/= p.m. (fixed) |
| Temporary Demonstractor/Instructor | Rs.21,370/=p.m.(fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and self prepared application.

28.04.2015 (சி-848) Registrar, University of Jaffna

வெற்றி ஒரு வேலைக்காரன்.
தோல்வி ஓர் ஆசிரியன்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கருநாகம் குடியிருக்க விட்டுவிடாதே மகனே!

19ஆவது திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தகவலை அறிந்த வடபுலத்து முதியவர் ஒருவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை எழுதினால் அக்கடிதம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தோம்.

அந்தக் கற்பனை இங்கு தரப்படுகிறது.

மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிக்கு அன்பு வணக்கம். மன்னிக்கவும் மாண்புமிகு என்று என்னை விழித்து அழைக்க வேண்டாம் என்று நீங்கள் கூறியதை மறந்ததால் "மாண்புமிகு" என்ற பதத்தை கூறி விட்டேன். இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருந்த எவருக்கும் "மாண்புமிகு" என்ற பதம் ஏற்புடையதல்ல என்பதால் அந்தப் பதம் பழுதாகிப் போனதாக கருதி அதனை ஒதுக்கி விட்டீர்களோ! என்று நான் நினைப்பதுண்டு. நல்லது. பெருந்தன்மைகள் இப்படித்தான் வெளிப்படுத்தப்படவேண்டும்.

அதிலும் 19ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட செய்தி அறிந்தேன். உங்களுக்குக் கிடைத்த அதிகாரங்களை வேண்டாம் என்று கூறிய உங்கள் உயர்ந்த பண்பைக் கண்டு இந்த முதியவன் புளகாங்கிதமடைகின்றான்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று மூன்று மாதங்களே நிறைவடைந்த நிலையில் உங்களின் அதிகாரத்தை நீங்களே முன்னின்று குறைப்புச் செய்தீர்கள் என்றால் அது கண்டு நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

19ஆவது திருத்தச் சட்டமூலம் தமிழர்களுக்கு எதையும் தரப்போவதில்லை என்பது தெரிந்த உண்மை. எனினும் 19ஆவது திருத்தச் சட்டமூலம் இந்த நாட்டிற்கு நல்லது என்று நினைக்கும் இந்த வயோதிபன் இலங்கைத் திருநாட்டை நேசிப்பவன்.

இலங்கையில் சிங்களவர்கள் இருக்கிறார்கள், தமிழர்கள் இருக்கிறார்கள், முஸ்லிம்கள் இருக்கிறார்கள் ஆனால் இலங்கையர்கள் இல்லையே என்று குறை தள்ளாடும் என் உள்ளத்தை வதைக்கிறது.

நாம் இலங்கையர் என்று சொல்லும் காலம் எப்போது வரும் என்று ஏங்கி ஏங்கி என் வாழ்நாள் நிறைவுக்கு வந்துவிட்டது.

என்ன செய்வது! உங்களைப் போன்ற நல்ல ஆட்சித் தலைவர்களுக்கு இந்த நாட்டில் பெரும் பஞ்சம். அதனால் மனித குருதியை குடிக்கும் கொலை வெறித்தனம் இந்த மண்ணில் தாண்டவம் ஆடியது.

இதனால் ஏற்பட்ட இழப்புகள், மனப் பேதலிப்புகள் கொஞ்சம் அல்ல. என்ன செய்வது! நாம் செய்த பாவவினைப் பயனோ! என்று நொந்து கொண்டபோது, நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவானீர்கள்.

மூன்று மாத காலத்திலும் நிறைவேற்று அதிகாரத்தை கையில் எடுக்காத உங்கள் உத்தம குணத்தை நினைக்கும் போதெல்லாம் என் கன்னத்தின் ஓரம் ஈரமாகிக் கொள்ளும்.

அன்பு மகனே மைத்திரி! நல்ல தலைவர்களிடம் ஆட்சி அதிகாரம் இருக்க வேண்டும் என்பது என் சிற்றறிவின் சிந்தனை. ஆனால், நல்லவர்கள் அதிகாரம் எதுவும் வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள்.

எதுவாயினும் 19ஆவது திருத்த சட்டமூலத்தை அரங்கேற்றியதோடு உங்கள் பணி நின்றுவிடக் கூடாது. நல்ல பிரதமர்களையும் நீங்களே இனங்காண வேண்டும்.

கறையான் புற்றெடுக்க, கருநாகம் குடியிருந்த கதையாக முடிந்துவிடக்கூடாது. கறையான் புற்றெடுத்தால் கருநாகம் குடியிருக்கத் தானே செய்யும் என்று சொல்லிவிடாதீர்கள். கருநாகங்களை கூட்டில் அடையுங்கள். பெட்டிக்குள் அமுக்குங்கள் எல்லாம் சரியாக வரும்.

அதுசரி மகன், காணாமல்போன பிள்ளைகளுக்கு நடந்தது என்ன? சிறையில் வாடும் தமிழ் கைதிகளுக்கு விடுதலை எப்போ? போரில் உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு எப்போது நிவாரணம்? இதற்கும் ஒரு வழி தேடுங்கள். அப்போது தான் நாட்டில் அழுகண்ணீர் குறையும். தர்மம் தலை தூக்கும்.

# கரைவலை தொழிலுக்கான காணிகளில் நிரந்தர கட்டடம் அமைக்கத்தடை

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு கடற்கரையோரத்தில் கரைவலை தொழிலுக்கென வழங்கப்படுகின்ற காணிகளில் நிரந்தர அபிவிருத்தி நடவடிக்கை எதனையும் செய்யக் கூடாது என கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திருச்செல்வம் திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கரைவலை தொழிலில் ஈடுபடுபவர்களுக்கான காணி வழங்குவது தொடர்பான கூட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

முல்லைத்தீவு கடற்கரையோரமாக கரைவலைத் தொழில் செய்பவர்களுக்கு காணி வழங்குவதற்கான ஏற்பாட்டு கூட்டமாக இது அமைந்துள்ளது.

காணிகளை பெற்றுக் கொள்பவர்கள் அந்த காணிகளில் நிரந்தர கட்டடங்களை அமைப்பதோ அல்லது தென்னை போன்ற பயிர்களை நடுவதையோ தவிர்த்துகொள்ள வேண்டும் என்றார்.

இதில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா, கரைவலைத் தொழிலாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (2)

# நடமாடும் சேவை இன்று மருதங்கேணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகமும் மருதங்கேணி பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மருதங்கேணி பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை இன்று மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் தேவைகளை இலகுபடுத்துவதற்காக இந்த நடமாடும் சேவை நடைபெறுகின்றது. இந்த வருடத்திற்கான இரண்டாவது நடமாடும் சேவை இதுவாகும்.

இந்த நடமாடும் சேவையில் பொலிஸ திணைக்களம், இலங்கை மின்சார கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், தபால் திணைக்களம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, காணி இறப்பு பிறப்பு விவாக பதிவாளர் திணைக்களம், தேசிய அடையாள அட்டைப்பிரிவு, சமுர்த்தி பாவனையாளர் அதிகார சபை, மோட்டார் போக்குவரத்துப் பிரிவு, கரையோரம் பேணல் திணைக்களம், திட்டமிடல் செயலகம், தாபனக்கிளை, கிராம அலுவலர் பிரிவு, அளவீட்டு அலகுகள் நியமனங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், விவசாயப்பிரிவு, சமூக பாதுகாப்பு பிரிவு, சமூக சேவைகள் பிரிவு போன்ற மக்களுடன் தொடர்புடைய திணைக்களங்கள் சேவைகளை மக்களுக்கு வழங்கவுள்ளன.

இச்சேவையில் இலகுவான முறையில் சேவைகளை பெறவிரும்புவோர் பிரதேச செயலகத்திற்கு வருகைதந்து தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், மருதங்கேணி பிரதேச செயலர், துறை சார் அதிகாரிகள், மாவட்டச் செயலக அலுவலர்கள், மருதங்கேணி பிரதேச செயலக அலுவலர்கள் சேவைகளை வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சிவில் பாதுகாப்புக் கூட்டம்

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலக சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.(இ-3-134)

## சத்திய தரிசனம்



### உழைத்து வாழ்வோம்

- ❖ உள்ளத்தில் அன்பு இருந்தால், கடவுளின் தரிசனம் கிடைக்கும்.
- ❖ உழைத்து வாழவே கடவுள் நமக்கு இரு கைகளைக் கொடுத்திருக்கிறார்.
- ❖ பெற்றோரை நேசியுங்கள். அவர்களின் ஆசி இருந்தால் நம் வாழ்வு மேம்படும்.
- ❖ உண்மையைப் பேசுங்கள். நேர்மையான வழியில் பணம் சம்பாதியுங்கள்.
- ❖ கடவுளை நம்பாவிட்டாலும், தன்னம்பிக்கையை மனிதன் இழப்பது கூடாது.
- ❖ அறிந்தாலும், அறியாவிட்டாலும் நீங்கள் ஒவ்வொருவரும் தெய்வத் தன்மை கொண்டவர்களே.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## வர்மக் கலையும் சித்தர்களும்

வர்மக்கலை. என்பது மருத்துவக்கலையின் ஒரு பகுதி. அது நம் நாட்டு சித்தர்களால் உருவாக்கப்பட்ட அரிய மருத்துவமுறை. இன்று அக்கலை தற்காத்துக்கொள்ளவும், எதிரிகளை வீழ்த்தவும் பயன்படுத்தப்பட்டாலும் ஆரம்பத்தில் அது சித்தர்களால் மருத்துவசிகிச்சைக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்தது. மனித உடலின் மேற்பரப்பிலுள்ள நரம்புமுனைகள் சிலவற்றை வர்ம ஸ்தானங்கள் எனச் சித்த மருத்துவர்கள் குறிப்பிடுவர். இந்நரம்பு முனைகளில் அடி விழுந்தால் உடலின் உள்ளுறுப்புகளுக்கு காயம் நேருமென்றும், உயிருக்கே ஆபத்து விளையக்கூடுமென்றும் கருதப்படுகின்றன. ஆனால் அதே இடங்களில் சில தொடு உணர்வுகள் மூலம் மென்மையான சிகிச்சை அளித்து, குறிப்பிட்ட உள்ளுறுப்புகளின் செயல்திறனை அதிகரித்து, குறிப்பிட்ட உள்ளுறுப்புகளின் செயல்திறனை அதிகரித்து, உடலியக்கத்தை சீராக்கவும் முடியும் என்பதைக் கண்டறிந்திருந்தார்கள் சித்தர்கள். இது குறித்த அறிவியலே வர்மக்கலை ஆகும்.

உலகத் தற்காப்புக் கலைகளுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் நமது சித்தர்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆன்மிக ரகசியங்களை உணர்ந்து கொள்ளத் தனக்கு உறுதுணையாக இருந்தது சிலம்பம்

கால் வரிசையை வைத்தே அவனுடைய சுவாசம் நிலை அறிந்து, சரியானபடி தாக்கி வெல்ல முடியும் என்பதையும் தெளிவுபடக்கூறுகிறார் அகத்தியர்.

வர்மக்கலை அகத்திய மாமுனிவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது உருவான இடம் பொதிகைமலை

கண்ணாடி, அகத்தியர் வர்ம வரிசை, அகத்தியர் மெய் தீண்டாக் கலை ஆகியன குறிப்பிடத்தக்கவை. எலும்பு

பயன்படுத்தி சித்தர்கள் மிகச்சுலபமாகக் குணப்படுத்தி வந்தனர்.

வர்மக் கலையை அகத்தியர் நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார். அவை:

தொடு வர்மம்: பலமாகத் தாக்கப்படுவதன் மூலம் ஏற்படுகிறது. இதை எளிதில் குணப்படுத்த முடியும்.

தட்டு வர்மம்: இது ஒரே ஒரு விரலை மட்டும் பயன்படுத்தி, தாக்கப்படுபவரின் உடலில் வலி ஏற்படாமல் மிக லேசாக தட்டுவதன் மூலம் பாதிப்புகளை ஏற்படுத்துவதாகும். இம்முறையில் தாக்கப்படுபவரை இதற்கு உரிய தனியான சிகிச்சை முறையில் மட்டுமே குணப்படுத்த முடியும்.

(தொடரும்)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனின் ஆசையை நிறைவேற்றிய விராட் கோலி

மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள போபால் நகரைச் சேர்ந்த சித்தாந்த் துபே என்ற சிறுவனுக்கு 'ஹாட்கின் லிம்போமா' எனப்படும் எலும்பு மஜ்ஜை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தான்.

நாம் இன்னும் கொஞ்ச நாட்களில் இறந்து விடுவோம் அதற்குள் நமது அபிமான கிரிக்கெட் வீரரான விராட் கோலியை பார்த்து விட வேண்டும் என அவனது உள்ளம் வெதும்பி அழுதது. இதற்கிடையில், குஜராத் தலைநகர் அகமதாபாத் நகரில் உள்ள பிரபல புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சித்தாந்த் துபே நோயில் இருந்து ஓரளவுக்கு விடுபட்டு விட்டான்.



ஆனாலும் விராட் கோலியை பார்க்க வேண்டும் என ஆசை அவனிடம் இருந்து நீங்கவில்லை. அவனது 73 வயது பாட்டி உன்னை விராட் கோலியுடன் சந்திக்க வைகக வேண்டியது என் பொறுப்பு என உறுதியளித்தார்.

சிறிது காலம் கழித்து அவனது நோயும் காணாமற் போனது. இந்நிலையில், பெங்களூர் ரோயல் லேஞ சர்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் கிரிக்கெட் அணியினருக்கு இடையிலான ஐ.பி.எல். போட்டி கடந்த 24 ஆம் திகதி குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்க பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவரான விராட் கோலி அகமதாபாத் நகருக்கு வருகிறார் என்பதை சிகிச்சைக்காக அங்கு வந்திருந்த சித்தாந்த் துபே தனது பாட்டியிடம் இதை பற்றி கூறியுள்ளான்.

முயன்றுதான் பார்ப்போமே என அவனது பாட்டியும் அகமதாபாத் நகரில் கோலி தங்கியிருந்த அந்த நட்சத்திர ஹோட்டலுக்கு சென்று மனேஜரை சந்தித்து, நடந்த சம்பவங்களையெல்லாம் கூறினார். இரக்கப்பட்ட மனஜர்,

கோலியிடம் இந்த வேண்டுகோளை தெரிவிக்க அவரும் சித்தாந்த் துபேவை சந்திக்க சம்மதம் தெரிவித்தார். உடனடியாக தனது காரை அனுப்பி சித்தானந்த் துபே மற்றும் அவனது குடும்பத்தாரை ஹோட்டலுக்கு அழைத்துவர செய்தார். தனது அறையில் அவர்களை உபசரித்து மகிழ்வித்த கோலி, சித்தாந்த் துபேவுடன் கிரிக்கெட், சினிமா உள்ளிட்ட விடயங்களை பேசி அவனை மகிழ்வித்தார்.

பின்னர், அவரிடம் இருந்து கண்ணீருடன் பிரியாவிடை பெற்ற சித்தாந்த் துபே, என்னுடைய கனவு நிறைவேறி விட்டது.

கோலியை போல சிறந்த கிரிக்கெட் வீரராக வர வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருககிறேன் என அனைவரிடமும் கூறி மகிழ்ச்சியில் பொங்கினான். (க)

# கங்குலியின் கிரிக்கெட் வாழ்க்கை நினைவு கூரும் புத்தகம் வெளியீடு

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்தவர் கங்குலி. இவரை தாதா என்றும் கொல்கத்தா இளவரசன் என்றும் கிரிக்கெட் ரசிகர்கள் செல்லமாக அழைத்து வருகின்றனர். இவருடைய கிரிக்கெட் வாழ்க்கை மற்றும் விளையாட்டின்போது ஏற்பட்ட சர்ச்சை மற்றும் அவர் கப்டனாக இருந்த போது நடந்த சம்பவங்களை தொகுத்து புதிய புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐ.டி. கம்பனியின் டிஜிட்டல் மார்க்கெட்டிங் வல்லுநரும், கங்குலியின் தீவிர ரசிகருமான சப்தர்ஷி சர்க்கார் எழுதிய, 'கங்குலி: கிரிக்கெட், கப்டன்சி மற்றும் சர்ச்சை' என்ற புத்தகம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. கொல்கத்தாவில்



நடைபெற்ற இந்த புத்தக வெளியீட்டு விழாவில், கங்குலியின் குழந்தை பருவத்தின் போது பயிற்சியாளராக இருந்து அசோக் முஷ்டாபி, முன்னாள் கிரிக்கெட் வீரரும் எழுத்தாளருமான ராஜ்ஷ் முகர்ஜி, மேற்கு வங்காள முன்னாள் கிரிக்கெட் வீரர் கோபால் பாசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.


இதுகுறித்து சர்க்கார் கூறும் போது, '

'இந்த புத்தகம், ஒரு சாதாரண மனிதனுக்கும் கிரிக்கெட் வீரருக்கும் இடையே உள்ள இனிய உறவை ஆய்வு செய்கிறது. நான் welovesourav.com என்ற பெயரில் இணையத்தளம் நடத்தி வருகிறேன். இதில் தாதா (கங்குலி) பற்றிய சுவராஸ்யமான கட்டுரைகளை எழுதி வந்தேன். இதை படித்தவர்கள் இதைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட வேண்டியதுதானே? என்று கேட்டார்கள்.

அப்புறம் அதற்கு தேவையான அனைத்தை யும் திரட்டி தற்போது புத்தகமாக வெளியிட்டுள்ளேன்'' என்றார்.

இந்த புத்தகத்தில் கங்குலி தனது விளையாட்டின்போது சர்ச்சைக்குரிய வகையில் பேசியது, கிரேக் சேபபலுடன் ஏற்பட்ட மோதல் போன்றவையும் இடம்பெற்றுள்ளது. (க)

# 1.90 கோடி சம்பளம் தருமாறு பிசிசிஐக்கு கவாஸ்கர் கடிதம்




முன்னாள் கிரிக்கெட் வீரர் கவாஸ்கர் பி.சி.சி.ஐ தலைவராக இருந்த காலத்தில் தனது வருமானத்தை இழந்ததாக கூறி 1.90 கோடி ரூபாய் சம்பளமாக பி.சி.சி.ஐ தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐபிஎல்-7 ஆவது தொடரின்போது உச்சநீதிமன்ற உத்தரவுப்படி பிசிசிஐ தலைவர் பதவியிலிருந்து சீனிவாசன் ஒதுக்கி வைக்கப்பட்டார். மேலும் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் படி முன்னாள் கிரிக்கெட் வீரர் கவாஸ்கர் பி.சி.சி.ஐ தலைவராக சிறிது காலம் செயற்பட்டார். அவரை ஐபிஎல் தொடரை கண்காணிக்குமாறும் உச்ச நீதி மன்றம் கேட்டுக் கொண்டது.

இந்நிலையில், தான் ஐபிஎல் தலைவராக பணியாற்றியதற்கான ஊதியமாக ரூ. 1.90 கோடி தருமாறு பிசிசிஐக்கு கவாஸ்கர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். அந்தக் கடிதம் குறித்து பிசிசிஐ அதிகாரி ஒருவர் கூறுகையில், பி.சி.சி.ஐ தலைவர் பதவி காரணமாக மீடியா பணிகள், டிவி வர்ணனை, கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள் எழுதுவது ஆகியவற்றை நிறுத்திய காரணத்தால் அதற்கு இழப்பீடாக இந்தத் தொகையை தருமாறு கவாஸ்கர் கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார். (க)

# சென்னையின் திரில் வெற்றி அற்புதமான ஒன்று: டோனி



ஐபிஎல் தொடரில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணியின் திரில் வெற்றி பற்றி அணித்தலைவர் டோனி கருத்து வெளியிட்டுள்ளார்

சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி, கொல்கத்தா பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களே எடுத் தது.

இதனையடுத்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா அணி. சென்னை அணியின் அபார பந்துவீச்சுக்கு ஈடுகொடு க்க முடியாமல் அடுத்தடுத்து விக் கெட்டுகளை இழந்தது. இதனால் கடைசி நேரத்தில் சென்னை அணி 2 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்றது.

இந்த வெற்றி குறித்து சென்னை அணித்தலைவர் டோனி கூறுகையில், இந்த வெற்றி அற்புதமான ஒன்று. சேப்பாக்க மைதானத்தை பொறுத்த வரை துடுப்பாட்டம் சிறபபாக அமை ந்தால் 160 ஓட்டங்கள் வரை குவிக்க முடியும்.

அதே சமயம் பந்து வீச்சு அபாரமாக இருந்தால் எதிரணியை 125 ஓட்டங்களுக்குள் சுருட்ட முடியும்.

ராபின் உத்தப்பா சிறப்பான தொடக்கம் கொடுத்தார். ஆனால் எங்களது அபாரமான களத்தடுப்பு மற்றும் பந்துவீச்சால் ஆட்டத்தை மாற்றினோம். ஜடேஜா சிறப்பாக பந்துவீசினார்.

அவர் வீசிய 3 ஓவர்கள் முக்கியமானவை. அதே போல் ரசல் ஓட்ட முறையில் வெளியேறியது ஆட்டத்தின் திருப்புமுனை என்று தெரிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கபடிப் போட்டி

(சாவகச்சேரி)

வவுனியா பிரதேச கபடிப் போட்டியில் தமிழ்த்தேசிய இளைஞர் கழகம் வெற்றியை தனதாக்கியது.

வவுனியா பிரதேச 27 ஆவது இளைஞர் விளையாட்டு விழாவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் கபடி மற்றும் எல்லே போட்டிகள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கபடிப் போட்டியின் இறுதிப் போட்டியில் உதயதாரகை அணியை வெற்றி பெற்றதன் மூலம் தமிழ்த் தேசிய இளைஞர் கழகம் சம்பியானது. (க-29)

# அஸ்வின் விலகல்



கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் சென்னை அணியின் வீரர் அஸ்வின் பந்து வீச்சு அபாரமாக இருந்தது.

அவர் 2 ஓவர் வீசி 5 ஓட்டங்கள் கொடுத்து 2 முக்கிய விக்கெட்டுகளை கைப்பற்றினார். அவரது பந்துவீச்சில் ராபின் உத்தப்பா, மணிஷ் பாண்டே ஆட்டம் இழந்தனர். இதில் ராபின் உத்தப்பா சிறப்பாக ஆடி கொண்டிருந்தார்.

12 ஆவது ஓவரில் களத்தடுப்பின் போது அஸ்வின் காயம் அடைந்தார். சூர்யகுமார் யாதவ் அடித்த பந்தை அவர் கட்ச் பிடிக்க முயன்றபோது வலது கைவிரலில் காயம் ஏற்பட்டது. அந்த கட்ச்சை அவர் தவறவிட்டார். இதையடுத்து அவர் மைதானத்தில் இருந்து வெளியேறினார். அதன் பின் அவர் பந்துவீச வர வில்லை.


அவருக்கு கைவிரலில் ஸ்கேன் செய்து பார்க்கப்படுகிறது. இதையடுத்து அவருக்கு ஓய்வு அளிக்க அணி நிர்வாகம் முடிவு செய்து இருப்பதால் அடுத்த 2 ஆட்டங்களில் அவர் விளையாடமாட்டார் என்று தெரிகிறது. (க)

# ஹபீஸ் சதம்

# பாகிஸ்தான் ஆதிக்கம்

வங்காளதேச அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், முகமது ஹபீஸ், அசார் அலியின் பொறுப்பான ஆட்டத்தால் பாகிஸ்தான் அணி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை எட்டியுள்ளது

வங்காளதேசத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி,





அந்நாட்டு அணியிடம் ஒருநாள் தொடரை இழந்தது. இதையடுத்து டெஸ்ட் தொடரில தற்போது ஆடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி குல்னா வில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சி வென்று முதலில் ஆடிய வங்காளதேச அணி, முதல் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 236 ஓட்டங்கள் எடுத்தது. சிறப்பாக விளையாடிய மொமினுல் ஹக் 162 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இரண்டாவது நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வங்காளதேச அணி சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந் தது. சகிப் அல் ஹசன் 25 ஓட்டங்களிலும், முஷ்பிகுர் ரகிம் 32 ஓட்டங்களிலும், சவும்யா சர்க்கார் 33 ஓட்டங்களிலும் அவுட் ஆகினர். இதனால், அந்த அணியின் முதல் இன்னிங்ஸ் 332 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது.

பாகிஸ்தான் தரப்பில் வகாப்ரியாஸ், யாசிர் ஷா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். முகமது ஹபீஸ், ஜல்பிகுர் பாபர் ஆகியோர் தலா 2 விக்கெட் எடுத்தனர்.

இதையடுத்து முதல் இன் னிங்சை தொடங்கிய பாகிஸ்தான், வங்காளதேசத்திடம் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுத்தது. தொடக்க வீரர் முகமது ஹபீஸ், தொடக்கம் முதலே விறுவிறுப்பாக ஆடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். மறுமுனையில் அவருக்கு துணை நின்ற சமி அஸ்லாம், 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் அசார் அலியுடன் இணைந்து வங்காளதேச பந்து வீச்சாளர்களை திணறடித்த முகமது ஹபீஸ், சதம் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். நிதானமாக ஆடிய அசார் அலி அரை சதம் கடந்தார்.

இதனால் நேற்றைய ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 227 ஓட்டங்கள் எடுத்தது. முகமது ஹபீஸ் 137 ஓட்டங்களுடனும், அசார் அலி 65 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். வங்காளதேசத்தைவிட பாகிஸ்தான் 105 ஓட்டங்கள் பின்தங்கியுள்ள நிலையில், நாளை 3-ம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. (க)

# வருண பகவானின் வருகையால் ராஜஸ்தான், பெங்களூர் ஆட்டம் இரத்து

ஐ.பி.எல் தொடரின் பெங்களூர் - ராஜஸ்தான் அணிகள் மோதிய லீக் போட்டியில் மழை குறுக்கிட்டதால், டி வில்லியர்ஸ், சர்ப்ராஸ் கானின் ஆட்டம் வீணானது. ஆட்டம் பாதி யில் ரந்தானதால், பெங்களூர், ராஜஸ் தான் அணிகளுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இந்தியாவில் 8ஆவது ஐ.பி.எல் தொடர் நடக்கிறது. இதில் நேற்று பெங்களூருவில் நடந்த லீக் போட்டியில் பெங்களூர் - ராஜஸ்தான் அணிகள் மோதின.

பெங்களூர் அணியில் இக்பால் அப்துல்லா நீக்கப்பட்டு, சாகல் இடம்பெற்றார். ராஜஸ்தானின் கிறிஸ் மோரிசிற்குப் பதில், ரிம் சௌதி சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான அணித் தலைவர் வோட்சன், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதன்படி களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஹெய்ல், அணித் தலைவர் ஹோலி ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது.

சௌதி வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரில் பவுண்டரி, சிக்ஸர் அடித்து கணக்கைத் ஆரம்பித்த ஹெய்ல் (10), அந்த ஓவரின் 4ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். சௌதியின் அடுத்த



ஓவரில் ஹோலி (1) சிக்கினார்.

இம்முறை 3ஆவதாக வந்த டி வில்லியர்ஸ், போல்க்னர் ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரிகள் அடித்தார். அடுத்து பிரவீண் தாம்பேவின் ஓவரில் 2 பவுண்டரிகள் அடிக்க, பெங்களூர் அணி 10 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களை எடுத்தது.

அதன்பின் மன்தீப் சிங் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தபோதும், பின்னி பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய டி வில்லியர்ஸ் அரை சதம் எட்டினார். இவர் 57 ஓட்டங்கள் எடுத்த போது தினேஷ் கார்த்திக் செய்த தவறால், துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டானார். அடுத்த சிறிது நேரத்தில் தினேஷ் கார்த்திக்கும் (27) ஆட்டமிழந்தார்.

வோட்சன் ஓவரில் அடுத்தடுத்து 2 பவுண்டரி விளாசிய 17வயது வீரர் சர்பராஸ் கான் ஓட்ட மழை பொழிந்தார். இவர், தாம்பே ஓவரில் 18 ஓட்டங்கள் எடுத்தார். வைஸ் (11), ஹரஷால் படேல் (6) நீடிக்கவில்லை.

20 ஓவர்கள் நிறைவில் பெங்களூர் அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 200 ஓட்டங்கள் குவித்தது. சர்பராஸ் கான் ஆட்டமிழக்காமல் 21 பந்துகளில் 45 ஓட்டங்களை எடுத்தார்.

ராஜஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில் மழை குறுக்கிட்டதால் போட்டியை கைவிடுவது என நடுவர்கள் முடிவெடுத்தனர்.

இதையடுத்து இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. (க)

## அவுஸ்...

கிழமை இரவு மரணதண்டனை நிறைவேற்றப் பட்ட எட்டுப் பேரில் ஆண்ட்ரூ சான் மற்றும் மயூரன் சுகுமாரன் ஆகிய இருவரும் அவுஸ்திரேலியர்கள் ஆவர்.

இவர்கள் இருவரையும் மரணதண்டனையில் இருந்து காப்பாற்றுவதற்காக அவுஸ்திரேலியா அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், இந்தோனேசியாவில் இரண்டு அவுஸ்திரேலியர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அந்நாட்டுக்கான தனது தூதுவரை அவுஸ்திரேலியா திரும்பப் பெற்றுள்ளது. (எ-11)

## தமிழர்களின்...


செய்யப்பட்டமையை இட்டு பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம் தமிழ் மக்கள் அரசியல் தீர்வினை எதிர்பார்த்திருக்கின்றனர். அதற்கான செயற்பாடுகளை நாம் உங்களிடமிருந்து எதிர்பார்த்திருக்கிறோம். இது மிகவும் சவால்நிறைந்த கஷ்டமான பணியாயினும் நீங்கள் அதை உறுதியுடன் செயற்படுத் துவீர்கள் என நம்பியிருக்கிறோம்.

அத்துடன் இத் தருணத்தில் அரசினாலும் இராணுவத்தாலும் கைப்பற்றப்பட்ட தமிழர் நிலங் களை மீள் கையளிப்பதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சியை மனதார பாராட்டுகின்றேன். மக்களும் மிக மகிழ்வுடன் தமது சொந்த இடங்களுக்கு குடியேறுவதை பார்த்து சந்தோச மடைகின்றோம். தமது சொந்த மண்ணில் குடியேறுவது அவர்களது வாழ்வில் நிறை மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. ஆயிரம் ஏக்கர் கையளிக்கும் செயற்திட்டத்தைத் தொடர்ந்து மேலும் எஞ்சிய வடக்கு கிழக்கில் உள்ள தமிழர் சொந்த நிலங்களை விரைவில் விடுவிக்க ஆவனை செய்யுமாறு தயவாய் உங்களிடம் வேண்டுகிறேன் என தெரிவித்தார்.

ஆயரின் வேண்டுதலை அவதானமாக கேட்டறிந்த ஜனாதிபதி ஆவன செய்வதாக ஆயருக்கு உறுதிமொழி வழங்கியதாக ஆயர் இல்ல வட்டாரம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஜோன் கெரிக்கு பாதுகாப்பு



அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன கெரியின் பாதுகாப்புக்காக அந்நாட்டு படைத்துறை அதிகாரிகள் 200 பேர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

இவர்களுடன் 40 மோப்ப நாய்களும் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் இத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி எதிர்வரும் சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையிலேயே, அவரின் பாதுகாப்பு மற்றும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஏற்கெனவே ஜோன் கெரி பயணம் செய்யும் பாதைகள் மற்றும் இடங்களின பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் போது வழங்கப்படும் பாதுகாப்பை விடவும், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரிக்கு கொழும்பில் அதிகமான பாதுகாப்பு வழங்க அமெரிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (எ-11)

## விசாரணை...

இந்த விசாரணை அறிக்கை வரும் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தமக்கு உறுதியளித்திருப்பதாகவும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப்பதிவுடன் அவர் ஐ.நா மனித உரிமை ஆணையாளருடன் எடுத்துக் கொண்ட படத்தையும் எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்டுள்ளார்.

எனினும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் எங்கு, எப்போது இந்த வாக்குறுதியை வழங்கினார் என்ற விபரங்கள் எதையும் எரிக சொல்ஹெய்ம் வெளியிடவில்லை. (எ-11)




## மரண அறிவித்தல்



### சண்முகம் இரத்தினம்மா

அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இரத்தினம்மா நேற்று (2015.04.29) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சண்முகத்தின் (சங்கிலி சண்முகம்) அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (கார் பாலன்), பாலசரஸ்வதி, பாக்கியலட்சுமி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் மோகனதாசன், சிவானந்தகுமார், ரஞ்சினி தேவி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற அசந்தன் மற்றும் சஜிதா, சபிதா, மாதிரன், மயூரன், அர்ஜுன், மதராணி, மகிபன், மாசிலன், மதீசகன், ஜிவிசன், மேனுஜன், சகிபன், செந்தூரன், செனந்தனன், கோடீஸ்வரன், அபிராமி, சயந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.04.2015) பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈமக்கிரியைக்காக அளவெட்டி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"குருவளை"
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (856) -குடும்பத்தினர்

## 19 இன்...

உரிமை.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பொறுப்பு கூறுவதன் ஊடாக மக்கள் அதிகாரத்தை உறுதிபடுத்தல் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல் என்பனவாகும்.

தேர்தல் ஆணைக்குழு, அரச சேவைகள ஆணைக்குழு, தேசிய பொலிஸ ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,

லஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய திட்டமிடல் ஆணைக்குழு, பல்கலைக் கழக நிதிஆணைக்குழு, அரசமொழிகள்ஆணைக்குழு.

தேசிய திட்டமிடல் ஆணைக் குழுவினூடாக அரச நிறுவனங்களின் பொருள் மற்றும் சேவை கொள்வனவு தொடர்பில் நீதியும் நேர்மையுமான தெளிவாக காணக கூடியதும், போட்டித்தன்மையுடன் கூடியதுமான மற்றும் செலவு பயனளிக்கக்கூடிய செயன் முறையை மேற்கொள்ள இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும். (எ-11)




கனடா

Express Entry Visa

தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (Work with PR)

2015ம் ஆண்டு 3 இலட்சம்* பேருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும் கனேடிய அரசாங்கத்தின் புதிய திட்டத்தின்கீழ்

150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு

180,000'க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

Degree/Diploma உடன் ஒரு வருட தொழில் அனுபவம் அவசியம்!

O/L or A/L உடன் Student Visa — With/Without IELTS

UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Spain etc.

SIKARAM — Education Abroad, Work, Migration & Visa Solutions — Any Visa to Any Country

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்

Student Visa - Spouse Visa - Visit Visa

Rejection Appeal & Migration

FREE Assessment — மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.

275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்), யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்

Tel: 0777 32 4004, 021 222 00 11

(C-852)



வானொலி நாடகங்கள் எழுதுவதில் நீங்கள் திறமை மிக்கவர்களா? உங்கள் திறமையை உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம். வெளிநாட்டு, உள்நாட்டு வாழ்வியலை மையமாகக் கொண்ட நாடகங்கள் விரும்பத்தக்கது. சிறந்த நாடகங்களுக்கு பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:- வைகுந்தம் 62/1, K.K.S Road, சுன்னாகம்.

இவ்வறிவித்தலை உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். அவர்களும் பயன் அடையட்டும். (145)



DCM யாழ்நகர்

2015 A/L. - புவியியல்

மாணவர்களுக்கான துரித மீட்டல் இறுதிச் சந்தர்ப்பம்!

ஆசிரியர் :- P.S.V தினேஸ்

- தேசப்படம்
- GIS,GPS, செய்மதித் தொலையுணர்வு, விமான ஒளிப்படம்
- புள்ளிவிபரவியல்
- பாறைப்படிவவியல்

(C-855)

ஆரம்பம் - 01.05.2015 (வெள்ளி)

நேரம் - காலை 7.00 - 9.00

- கிழமையில் 05 மணித்தியால துரித மீட்டல் நடைபெறுகிறது.
- அனுமதி நேர அட்டவணையினை நிர்வாகத்தில் இன்றே பெற்றுக் கொள்ளலாம்.


## ஒரேகல்லில் இரண்டு குருவிகளை...

நீக்கப்பட்டுள்ளது. ஜே. ஆர்.ஜெயவர்தனவினால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

இதன்மூலம் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்தனவும், மகிந்த ராஜபக்ஷவும் தோல்வியடைந்துள்ளனர்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் இது பொய்யான அரசு, வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசு என பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் எமது அரசின் வாக்குறுதியை நாம் தற போது நிறைவேற்றியுள்ளோம்.

குறித்த அரசியலமைப்பின் ஊடாக ஜனாதிபதியின் பதவிக்காலம், ஆறு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி பதவ[illegible]ந்தடவைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் ஜே.ஆர். ஆட்சியி[illegible] நிறைவேற்று அதிகாரத்திற்[illegible] எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப[illegible] முன்னாள் ஜனாதிபதி மகிந்த, [illegible]

அவரது ஆட்சி காலத்தில் [illegible] ஆவது திருத்த சட்டத்தை [illegible]படுத்தி அதனூடாக அதிக[illegible]களை அதிகரிக்க நடவடிக்கை [illegible] கொண்டார்.

இதன் போது அவருக்கு[illegible] துழைப்பு வழங்கியமைக்[illegible] நான் இச்சந்தரப்பத்தில் மன்ன[illegible] கோருவதாக அமைச்சர் அ[illegible] போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 19 நிறைவேற்ற[illegible]டுள்ள நிலையில், தேர்தல் மு[illegible]மையில் மாற்றத்தை ஏற்படுத்[illegible] 20-ம் திருத்தச்சட்டத்தை ந[illegible]வேற்றவும்நடவடிக்கை எடுப்போ[illegible] அமைச்சர் குறிப்பிட்டார். [illegible]


யாழ். நகரில் பிரபல்யமான

கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி

Mobile Phone Repairing Course

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

May முதலாம் திகதி காலை 9.00 மணிமுதல் 1,2,3,4, ஆகிய நான்கு தினங்களில்

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:

- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

Special Trainer Ganesh Sir

பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும். (C-854)

BTEC # 21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna. 077 6131358


## மரண அறிவித்தல்

### கந்தையா கந்தவேள்

**(முன்னாள் வீதி அபிவிருத்தி திணைக்கள கணக்காளரும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தரும்)**



செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் கந்தசுவாமி கோவில் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தவேள் 28.04.2015 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இலட்சுமியின் மூத்த மகனும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் இலட்சுமிப்பிள்ளையின் மருமகனும் கோமளரஞ்சிதம் (ஆசிரியை - இராமநாதன் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் யதுர்ஷிகா, தக்சிகா (சொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானவேளின் (இ.போ.ச பருத்தித்துறை) அவர்களின் பாசமிகு சகோதரனும் பாலநஞ்சினி, திருச்செல்வம், சச்சிதானந்தன் (சுவிஸ்), விவேகானந்தன், குமுதினி (ஜேர்மனி) செல்வரஞ்சினி (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), சதானந்தன் (ஜனசக்தி இன்சூரன்ஸ்), சுகந்தி ஆகியோரின் மைத்துனரும், கோவர்ஷா, நேதுசன் ஆகியோரின் பெரிய தந்தையும், தித்திகாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2015) மதியம் 12.00 மணியளவில் செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விரக்களி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

T.P: 0775968438 (C-855)

தகவல் : குடும்பத்தினர்


nation popular travels & tours

Head Office
#16 1/2 E.S.Fernando Mawatta
Colombo-06
0114651199
0773083820

Branches
27 Lower St.Andrews Place
Colombo-15
0114375357

128,Brown Road
Jaffna
0214920920

179A Railway Station Road
Vairavapuliyankulam
Vavuniya
0244930830



விசேட விலைக் கழிவு

மதுரை(RTN) 16700/-

Paris(ow) 45300/-

London(ow) 43200/-

Montreal(ow) 81100/-


## 19ஆவது திருத்...

மையை காரணமாக கொண்டு நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் ஸ்திரமற்ற நிலைமையை ஏற்படுத்த மகிந்த தரப்பு மேற்கொண்ட திட்டம், மக்கள் சக்திக்கு முன்னால் தவிடுபொடியாகி போயுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ [illegible] அந்த பதவிக்காக போட்டியிட முடிய[illegible]

இரண்டு முறைக்கு மேல் ஒ[illegible] ஜனாதிபதியாக பதவிவகிக்க கூ[illegible] வகையில் மகிந்த ராஜபக்ஷ நிறைவே[illegible]றிய 18 ஆவது திருத்தச் சட்டம் [illegible] ஆவது திருத்தச் சட்டத்தின் மூல[illegible] இரத்துச் செய்யப்பட்டிருப்பது மகி[illegible] ராஜபக்ஷவுக்கு கொடுக்கப்பட்ட அ[illegible]யல் ரீதியான பாரிய அடி எனவும் அ[illegible]யல் அவதானிகள் சுட்டிக்காட்டியு[illegible]ளர். [illegible]

## 19ஆவது திருத்தம் நிறைவேற்றம்...

கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய தேர்தல் முறையை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சி போதிய அவதானத்தை செலுத்தாதது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் பாரிய பிரச்சினையாகும்.

எந்த ஜனாதிபதிகளும் மாற்றம் செய்யாத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களில், 19 ஆவது திருத்தச் சட்டம் மூலமாக மாற்றம் செய்[illegible] ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே[illegible] மிக சிறப்பான நபர் என்பதை [illegible]லில் ஒப்புவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால [illegible]களின் மனதில் என்றும் அழிய[illegible] அடையாளத்தை ஏற்படுத்திக் கொ[illegible]டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை[illegible] குறைக்காது அதன் அதிகார[illegible]களை முன்னாள் ஜனாதிபதிக[illegible] மேலும் அதிகரித்து கொண்டன[illegible]

எனினும் நிறைவேற்று அதி[illegible]ரங்களை குறைத்து கொண்ட[illegible] மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே[illegible] பாரிய அர்ப்பணிப்பையும் சேவையை[illegible] தியாகத்தையும் செய்துள்ளார் எனவும் எ[illegible] கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். [illegible]


BA கலைமாணி (வெளிவாரி)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (ஒலுவில்)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L -ல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
- பரீட்சைகள், கருத்தரங்குகள் யாவும் புதிய உயர்கல்வி வளாகத்தில் நடைபெறும்.
- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வட பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம் புதிய உயர் கல்லூரியாகும்.
- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

(C-847)

விபரங்களுக்கு :- S.அருள்நங்கை (நிர்வாகி)

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். 021 2228148


## பாராளுமன்றை...

கத் தெரிவித்துள்ளார்.

இந்த பாராளுமன்றிற்கு அதிகா[illegible] கிடையாது எனவும், 2010-ம் ஆண்டு மக்[illegible] வழங்கிய ஆணையையே இந்த பார[illegible] மன்றம் பிரதிபலிக்கின்றது என அவர் [illegible]வித்துள்ளார்.

பாராளுமன்றம் உடனடியாக கலை[illegible]க்கப்பட வேண்டியது அவசியமானது எ[illegible] அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் ஸ்திரமற்ற தன்மையான[illegible] நாட்டுக்கு பாதக விளைவுகளையே ஏற்படுத்[illegible]தும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட[illegible]